உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி. ௨௪] அக்ஷய ௵ புரட்டாசி ௴ [பகுதி ௧௧.

Vol. XXIV. September-October-1926. No. 11.

## ஜாதிமதவேற்றுமையும் சமுதாய ஒற்றுமையும்

'பாரதபூமியிற் பலவேறுபட்ட சமயங்களும் ஜாதிகளும் இருக்கின்றன. அதனால் பாரதசமுதாயம் ஒன்றுபட் டுயர்வாழ்வெய்த முடியாது',—என்று பலர்சொல்லக் கேட்கிறோம். இப்படிச்சொல்லுபவர் நம்நன்மைவிரும்பாத பிறநாட்டுப்பேதையர் சிலர்மட்டுமல்லர்; நம்மவருள் ஆங்கிலவுணர்ச்சிமுதிர்ந்த மேதையர்பலரு முளர். இது முதுக்குறைவில்லார் சழக்குரையேயாமென்பதைச் சிறி தாராய்வாம்.

ஜாதிமதவேற்றுமைகள் நமதுநாட்டிலுண்டு. எந்தநாட்டி லில்லை? சமுதாயவொற்றுமையிலும் நாட்டின்மீ தன்பிலும் தலைசிறந்தனவாகக் காணப்படு மன்னிய ஐரோப்பியநாடுகளேனு மித்தகைய வேற்றுமைகளை விலக்கிநிற்கின்றனவா? ஏசுமதமன்றி, இதரமதமறியாத ஐரோப்பியர் சமயச்சண்டையற் றமைதியுற்றனரா? கிறிஸ்துசமயம், அரமீனியம் கிரேக்கம் உரோமக்கோவில் என்ற பழம்பிரிவுகளோ டமையாமல், ஆதிரோமமதம் திருத்தப்புத்தேசுமதம் எனப் பிளவுபட்டு, இவ்வொரு சமய விருவகுப்பினருந் தம்முட்கொண்ட மாற்சரியத்துக்கும் மதவெறித் தீச்செயற்கொடுமைகளுக்கும் நாகரிகமற்ற மிலேச்சர்சரிதைகளிலு மீடுகாண லரிதாகும். இக்கிறிஸ்தவர்சமயப் போராட்டங்களைநோக்க, நமதுநாட்டுச் சைவ சமணத் தென்கலை வடகலைச்சண்டையெல்லாம் குற்றமற்றவிளையாட்டாக் கொள்ளவேண்டும். சமயவெறி தலையெறி

மதவாதநோய்மலிந்தகாலத்திலும், நமதுநாட்டிற் சிலமடங்க ளெரி
யுண்டதும் அற்பமான சிறுசச்சரவு சிலவிடங்களில் நிகழ்ந்ததுமுண்டே
தவிர, ஒருசாரார் பிறமதத்தரைப் பிடித்துப் பிணித் துயிருடன்
தழலிலிட்டு, எரிபவர்பரிபவத்தை அருவிருந்தாகக்கொண்டு குழாங்கூடி
விழாக்கொண்டாடின தில்லை. கொள்கைவேறுகொண்டதைக் கொடுங்
குற்றமாக்கி, ஊர்கூடிக் கல்லெறிந்து கொன்றதில்லை. பட்டினிவைத்துக்
கோபமூட்டிய கொடுவிலங்குக் கிரையாக்கி மகிழ்ந்ததில்லை. "சில சமயக்
கோட்பாடுகளிற் சம்மதம் தரச் சகியாத பழுதற்ற வொழுக்கமுடைய
பழுதாயசேவைமேற்கொண் டான்றமுதறிவாற் சான்றோருக் குரிய
தண்டனை, அவரைத் தழலிலிட்டுப் பிறர் விழவெடுக்கவேண்டும்" எனச்
சட்டங்க ளேற்படுத்தியது மில்லை. இவையெல்லாம், பலவேறுசமயம்
புகா ஒருமதமுடைய கிறிஸ்தவசமுதாயச்சரிதைகளிற்றான் காண்
கின்றோம். இக்கொடுமைகளெல்லாம் ஒருநாட்டார் பிறநாட்டாருக்குச்
செய்தனவாக் கருதவேண்டாம். ஒருநாட்டில் ஓரரசியலின்கீழ் ஒன்று
பட்டகுலாசாரமுடையாரே சமயப்பற்றின்காரணமாகத் தத்தமக்குட்
செய்தனவேயாகும். பலபட்டவரசியல்களின்கீழ்ப் பலவேறுசமயங்களும்
வேறுபட்ட ஜாதிபாசாரவநுஷ்டானங்களும் தொன்றுதொட்டுப் பரவி
நின்ற பாரதப் பழநாட்டிலோ நாள்தோறும் அகப்பிரிவுகளும் புறக்கிளை
களும் முளைத்துத் தழைக்க வைதிகமதம் நின்றுநிலவியது. அதுமட்டு
மல்ல; பல புறச்சமயங்களும் வந்து புகப்புக, புதியவை விருந்தினராகத்
தழுவிச் சற்காரங்களா லாதரித்தும், ஆதரத்தா லவரைப் பிணித்தும்
நாளடைவில் நம்மவராக்கிப் பாரதசமுதாயம் பழியற்றுச் சிறந்து
நிற்கின்றது.

இவ்வாறு, ஒருமதமேற்கொண்டிருந்தும் சமயச்சண்டைக்
கொடுமைகள் மிகுந்த ஐரோப்பியநாடுகளிற் சமுதாயவொற்றுமை
யுணர்ச்சி தழையா திருக்கவு மில்லை: மதமாற்சரியவேறுபாடுகள் மிகவுங்
குறைந்து அனுதாப ஆதரத்துட னொன்றிப் பல நீண்ட நூற்றாண்டுக
ளாகப் பலசமயங்களும் ஜாதிகளும் வாழ்ந்துவந்த பழம்பாரதநாட்டில்
தற்சமயம் சமுதாயவுணர்ச்சி திட்பங்குறைந்து நெகிழ்வுற்றுமிருக்கிறது.
ஆதலால் சமுதாய ஒற்றுமைக்கு, ஜாதி மத அபிப்பிராய வேறுபாடுகள்
தீராத் தடையு மில்லை ; சமயமொன்றுடைமை ஜாதிவேறின்மையாதி

காரணங்கள்மட்டும் போதியனவுமாகா. எனவே, நம்மவருள் சமுதாய வொற்றுமையின் தற்கால நெகிழ்வுக்குரிய காரணத்தை யாராய்ந்து களைவதும், ஒற்றுமையுணர்ச்சி தடிக்கத்தக்கவழி கண்டு கையாடுவதுமே நங் கடமையாகும். ஜாதி சமய வேறுபாடுகளே சமுதாயநெகிழ்வுக்குக் காரணமாக்காண்பவர் பாரதசமுதாயத்துக்கு என்றுமே விமோசனங் காணாரவர். வைதிக ஹிந்துமதத்தினுட் சாதிவேறுபாடுகளை இவர் விரும்புகிறபடி ஒருவாறு குறைத்து ஒன்றுபடுத்துவதானாலுங்கூடச் சமயவேறுபாடுகளை விலக்குவதெப்படி? அரபியாவிலும் சீனத்திலும் ஆங்கிலநாட்டிலுமே அந்நியமதஸ்தர் பெருகி அவரவர்க்குரிய ஆலயங்களுமெழவாரம்பிக்கு மிக்காலத்தில், பாரதநாட்டி லனைவரையும் ஓரேசமய மேற்கொள்ளச்செய்ய முயலப்போகின்றார் யார்? ஒவ்வொரு சமயத்திலுமே நாள்தோறும் பிரிந்துபெருகும் உட்பிரிவுகளைப் பிணைத்தொருமுகப்படுத்தி யொன்றவைப்பார் யாவர்? ஜாதி சமய வேறுபாடுகள் நிற்க; சாதாரண வொழுக்க வழக்க உண வுடைமுறைகளிலும் அபிப்பிராயத்துறைகளிலும் ஒரேவகுப்பினருள்ளும் அனவரதம் பிளவு காணவில்லையா? குலங் குடி வகுப்புக்களில் வேறுபடாதவரும் சோதரருங்கூடத் தம்முள் நாள்தோறும் பலபடியும் வேறுபடவில்லையா? மனிதர் ஒவ்வொருவருமே கால சமய காரண வேறுபாடுகளாற் றம் வழக்க ஒழுக்கங்களையும் கருத்துக்களையும் திருத்திக்கொள்ளாதிருக்கமுடியவில்லையே? அப்படியிருக்க, விரிந்த பெரும் பாரதகண்டமுழுதும் ஜாதி சமய வேறுபாடுகளற் றொருதுறைப்பட்டாலன்றிச் சமுதாய ஒற்றுமை யேற்படாதென்பவர்கொள்கை யுண்மையாமா? உண்மையாமேல், உலகத்தி லென்றும் யாண்டு மொருசமுதாய மேற்படவே முடியாதாகவேண்டும். சமயம், ஜாதி, வகுப்பு, தொழில், துறை, அறிவு, திரு, ஆற்றலாதி எண்ணிறந்தவிஷயங்களாலும் எல்லையற்ற வேறுபாடுகள் எக்காலத்திலும், எந்தநாட்டிலும், எல்லாமாந்தரிடத்து மெழுவதே யியல்பாயிருப்பதால், மனிதசமுதாயமே கிடையாதாகும். ஆனா லித்தகைய வேறுபாடுகளால் நமக்கு நலமும் நம் நாட்டுக்கு விடுதலையு மில்லையென்று வாதிக்கவருபவரெல்லாம், இவ்வேறுபாடுகள்நிறைந்த மேலைநாடுகளிற் சமுதாயவொற்றுமையுண்மையை மறுக்கத்துணிகின்றிலர். நம்பா லிக்காலம் அவ்வொற்றுமைக்குறைவுண்மையை நாமும் மறுக்கவில்லை. அதன் காரணவிசாரணையிலும், அக்குறைதுடைத்து நம்மவ

ரொற்றுமைநலம் வளர்ப்பதற் கிவர்சொல்லும் வழிகளிலுந்தான் நாமிவ ரோடு மாறுபடுகின்றோம். இப்படிச்சொல்லுவதால் ஜாதிவேறுபாடுகள் தற்காலம் நமதுநாட்டிற் கவசியமென்றாவது அவற்றாலாந் தீங்கில்லை யென்றாவது வாதிக்கும் சனாதனதர்மவிமர்சனமெழுத நாம் முன்வா வில்லை. ஜாதி சமய வேறுபாடுகளை நம்மவர்சமுதாயவாழ்க்கைக்குத் தீராத்தடையாகக்கொள்பவர்வாதம் ஏதம் தருவதாகும்; இவ்வேறுபாடு களினிடையே ஒற்றுமையுணர்ச்சி வேரூன்றித் தழைத்தோங்கலாகும்—என்ப தெங்கருத்தாகலா லதை வெளிப்படுத்துவதே இவ்வியாசத்தி லெம் முக்கியநோக்கம்.

நம்முள் ஜாதிமத வேற்றுமையுள்ளவளவும் சமுதாயவொற்றுமை யேற்படாதென்பார்க் கின்னுஞ் சில சொல்லுவ தவசியம். வேறுபாடுக ளனைத்தையும் விலக்கி, யாவரையும் எல்லாவற்றிலும் யாண்டும் எக் காலத்தும் ஒருநிலைப்படுத்தல் ஆவதா? அவசியமா? அறந்தானுமா? நலந்தருமா?—என்ற சிலவற்றையுஞ் சிந்திக்கவேண்டும். அறவே வேற் றுமையனைத்தும் வேரறுத்தல் அமானுஷ்யம். இஃ தாவதன்றாகவே, சமுதாயநலந் தேடு முயற்சியே வீணாகும். நம்மவர் சமுதாயவாழ்வையே வெறுக்கவேண்டுமென்ப தெவரும் விரும்பாததாகையால், சமுதாயநலந் தேடுபவர் ஆகாமுயற்சி மேற்கொள்வதா லாம் பய னில்லை. ஆகவே, சமுதாயநலம்வளர்ப்பதற்கு வேற்றுமைகளையெல்லா மறவே துடைக்க வேண்டுமென்னும் வீண்வாதத்தை மறப்பதே முதற்கடமை. இனி, ஆவதொருகாரியமெனினும், அது கருதிமுயலுங்காரியத்திற் கவசிய மன்றேல், அதைக் கைவிடுவதே முறை. வேறுபாடுகளை விடாத பிறநாடு களிற் சமுதாயவொற்றுமை வளரக்காணுவதால், நமது சமுதாயநல் வாழ்வுக்குமட்டும் வேற்றுமையனைத்தையும் முதலில் விலக்கமுயல்வ தனாவசியமென்பது விசதமாகிறது. அன்றியும், ஆவதுமில்லை; அவசியமு மல்லாததொன்றை மேற்கொள்வது அறமாகாது. அறமற்ற வெது வும் நலம் தராது. ஆகையால் ஜாதிமதவேறுபாடுகளனைத்தையும் நம் பாரதசமுதாயத்திலிருந்து விலக்கிவிடமுயல்வது, அமானுஷ்யம், அனா வசியம், அறமற்றது, நலம் தராததுமாகும்.

மேலும், வேற்றுமையற்றவிடம் இயற்கையி லுண்டா? ஒற்று மைக்கு வேற்றுமை விலக்குண்டா? வேற்றுமைமுழுது மற்ற வொற்

றுமையுடைமை, மக்கட்டன்மைக்குமட்டுமேயில்லை; இயற்கைமுறைக்கே பொருந்தாவொன்றாகும். "இறைவன், வேற்றுமைமலிந்த இயற்கைநிலையில் தன் ஒற்றுமையை விளக்குகின்றான்," என்பதே சர்வசமயிகளின் சம்மதவுணர்ச்சி. ஒற்றுமையைப்போலவே வேற்றுமையும் இன்றியமையா இயற்கையறமாகும். ஒற்றுமையின்றி வேற்றுமை நிலைபெறாது. வேற்றுமையின்றி ஒற்றுமையும் நிலைபெற்றதன்று. இதனை நிலையியற்பொருள் இயங்கியற்பொருள் ஆகிய எல்லாவற்றுள்ளுங் காணலாம். பொருள்களெல்லாம் ஒருவாற்றானொப்புமையும் ஒருவாற்றான் வேற்றுமையும் உடையனவே. இதனை ஒருபுடையொப்புமை என்ப. பிரபஞ்சமேன் பலதிறப்படவேண்டும்? எல்லாம் நீராகவேனும், நிலமாகவேனும் அமையப்படாதா? நிலத்திலும், மலையும் யாறும் மருதமும் பாலையும் கலந்தமைவதேன்? மரமும் செடியும் புல்லும் பூண்டும், நீர்வாழ்வனவும் நிலத்திருப்பனவும், ஊர்வனவும் பறப்பனவும், உயிருள்ளவு மற்றனவும், தம்மிற் சாதிபேதமற்று வகுப்பொன்றேயுடையவாகக் காணப்படுகின்றில. மக்களினும் மாக்களிடை வகுப்புவேற்றுமைகள் மிகப் பலவாக மலியக் காண்கின்றோம். இவ்வாறியற்கைமுழுதும் பாக்கக்காணும் பலதிறவேற்றுமைகளால் ஒற்றுமைநல மொழிந்ததாயுமில்லை. ஒவ்வொருபொருளுமே வேறுபட்ட *அணுத்திரள்கள் †அசைத்திறங்களாலான ஒற்றுமைநலத்தை நமம்படக்காட்டிநிற்கின்றது. வாழ்க்கைநிலைக்கே வேற்றுமைகளு மின்றியமையாதனவாகக் காண்கின்றோம். பொருளானுந் தொழிலானும் வேற்றுமையற்றவிடத்தில் வாழ்வழியும். ஆனாலொற்றுமையற்ற தனிவேற்றுமைத்தொகுதியிலும் வாழ்வு கிடையாது. வாழ்க்கைச்சிறப்புக்கும் இன்பத்திற்கும் இவ் விருதிறப்பட்ட இயற்கைநிலையு மின்றியமையாததாம். ஆயின் ஒவ்வொருபொருளும் அதனிலைக்குப்பொருந்தியவாறு ஒற்றுமைவேற்றுமைத்திறங்களைக் கலந்தமைந்துநிற்கும். அளவையிலேனும் அமைப்பிலேனும் இத்திறங்களின் பொருந்தாப்புணர்ச்சி அழகையும் வாழ்வுநிலையத்தையு மழித்து நிலைகுலைவிக்கும். இதனு லிவ் விருதிறங்களுந் தம்முட் பொருந்தாநிலைகளில்லை, உண்மையில் யாண்டும் எதனினு மொருநிலைப்பட்டேநிற்குமென் றறிவோம். இவைதம்முள் அளவையு மமைப்பும் பொருந்தப்புணரின், வாழ்வும் வளர்ச்சியும் வனப்பொடுநலனுல் வளம்பட வமையும்.

---

* அணு—வஸ்துலேசம் (Atam) † அசை—சக்திலேசம் (Electron).

இவற்றின் தந்திரம்பிறழ்ந்த பொருந்தாப்புணர்ச்சியே அழிவுங் கேடும் விளைநிலமாகும். இவ்வா றெவ்வகைநலத்துக்கும் வேறுபட்ட உறுப்புடைமை வேண்டும்; உறுப்புக்களி னொருப்பாடும் வேண்டும். சட உயிர்ப்பொருள்க ளொவ்வொன்றின் தனிவாழ்வுக்குமே இவ்வித ஒற்றுமை வேற்றுமைக ளின்றியமையாதனவாம்.

திணைமுறையிலும் வேற்றுமைத்தொகுதி மிகுந்து அவற்றிடை ஒற்றுமைத்திற மூடுருவி யொருப்பட்டுநிற்பதே உயர்வுக்குறியாகக் காண்பாம். ஒற்றுமையே வெளிப்படையாய் வேற்றுமை சுருங்கிய பொருளெல்லாம் அஃறிணையும் அதி லறத்தாழ்ந்தனவுமாகி நிற்கும்; திணை யுயரவுயர, வேற்றுமைத்திறமு மிகுந்துகாணும். சடநிலைக்கும் எவ்வுயிர்த் தனிவாழ்வுக்கும் வேற்றுமையுடைமையும் அவற்றிடை ஒருப்பாட்டுண்மையு மின்றியமையா வியற்கையறமாகவே, உயர்திணை மக்கட்டொகுதியாலாய சமுதாயவாழ்க்கையி லவ்வறவரம்பை மீறலாமா? வேறுபட்டவுறுப்புக்களி னொருப்பாட்டா லுடல் சிறப்பதே போல், பலதிறப்பட்ட மக்கள்கூடி யொன்றிவாழுஞ் சமுதாயமே சிறப்புடையதாகும். வேறுபாடற்ற மக்கட்டொகுதிகள், எல்லாம்வாய், எல்லாம்வயிறென்ன உறுப்புவகையற்ற வோருடற்புழுக்களேபோ லுயர்வற்ற வாழ்க்கைநிலையுண்டயனவேயாம். ஆகவே வேறுபாடுண்மையால்மட்டும் சமுதாயவாழ்வுக் கிழுக்கில்லை. ஒன்றிவாழ்திறமுடைய சமுதாயம், அதன்மக்களிடைத் தோன்றும் வேறுபாட்டின்மிகையாற் றளராது, எழிலும் வளமும் எய்துவதாகும். ஒருப்படவாழ விருப்படையாத மாந்தர் சமுதாயவாழ்வை மறத்தல் முறை, துறத்தல் கடன்; வேறுபாடுடைமையே வெறுக்கொணு விலக்கொணு இயற்கையறம். வேறுபட்டாரோடொன்றிவாழ்தலே சமுதாயவாழ்க்கையின் முதலறம். வேற்றுமையி லொற்றுமை யியல்பு:. அதனல் வேறுபாடுடையார் தம்முள் ஒன்றிவாழ்த லெளிதேயாம். வேறுபாடெல்லாம் வெறுக்கொணுது. வெறுப்புடைமையே ஒன்றிவாழத் தடையாகுமன்றி, வேறுபாடுடைமை தடையாகாது. வேறுபாடுடைய பிறரை அதுபற்றி வெறுப்பவரே சமுதாய வாழ்வுக்கு விஷமாவர். வேறுபட்ட ஒவ்வொருவர்தனித்திறவளர்ச்சிக்கு மிடையூறின்றித் தந்நலம்போலப் பிறர்நலத்தையும் பேணி, வெறுப்பின்றி யொன்றிவாழ விரும்புபவரே சமுதாயநலம் வளர்ப்பார்.

இனிக் கூடிவாழ்தலி னவசியத்தளவே அவ்வாழ்க்கையைவளர்க்கு மக்களை பிறக்கும். இவ்விதியும் சர்வஜீவவாழ்க்கைக்கும் பொதுவானதே. முதலில், பறவை விலங்கினங்களை விசாரிப்போம். உடல் வலியும் மனவுரமுமுடைமையோடு, தன்னலவிருப்பமிக்குடைய வகுப்பினவெல்லாந் தனிவாழ்வனவேயாம்; கூடிவாழப் பரபரப்பதில்லை. இவை யெல்லாம், பிறவற்றின் கேட்டளவிற் றந்நலமுமின்பமுந் தேடுவனவாம். பறவைகளுள், வைரியுங் கழுகு மிக்குணத்தவை; விலங்கினத்தில், புலி சிங்கம் போன்றவையு மித்தகையனவே. பிறவற்றைக் கொன்று தின்னு மியல்புடைமையோடு, பிறிதுதுணை வேண்டா வலியுமுடையவை; அதனாற் கூடிவாழக்கூடாமையும் அவசியமன்மையுமுடையன. வலியும் வன்கண்மையுமுற்ற படைக்கருவி ஆடு மானன்ன பிறவகுப்பின பலவுங் கூடிவாழ்வனவாம். ஊனுண்பவற்றுள்ளும், பிறவற்றை வருத்துதலி லின்பந்தேடா வியல்பினவெல்லாம் கூடிவாழத் தக்கனவேயாம். கள்ளக்காகமுங் குள்ளநரியு மிவ்வகுப்பின. உரமற்று இரைதேட உதவிவேண்டு மவசியத்தால்மட்டு முடனுறைந்து குரூரவியல்பு குன்று ஓநாயன்னவை பசிதணிக்க வலிமெலிந்த தம்மவற்றையே அற்றந்தேடித் தின்னக் கொல்லும்; இரை கிடைத்துழி இனத்தையு மொதுக்கித் தாமுண்ணும்; இனையவற்றின் சமுதாயவாழ்வு தன்னலத்திற்குவேண்டுமளவே யாகும்; உண்மைச் சமுதாயவாழ்வாகாது. சேர்ந்துவாழ்வதில் விருப்பமுடைய காகம், தன்னினத்தைக் கரைந்துண்ணும்; எனில், பிணமுகக்கு மிக்காகமும் தன்னினந் தின்னாது. ஆனால் உரமற் றுதவிவேண்டி யுடனுறையு மவசியமின்றியும், போதிய வலிவளம் படைத்தும், சமுகவாழ்க்கையி லின்புற்றுக் கூடிவாழும் யானைக் கூட்டத்திற்றான் ஒருசிறி துண்மைச்சமுதாயவாழ்க்கைநலங் காணலாகும். இனிய கருப்பங்காடு கண்டபோதும், பிடியும் களிறும் இளையனவும் வலியற்றனவு முண்ணவிட்டுப் பக்கல்நின்று பகைகாத்துக் குழுத்தழுவிப் பெருமிதங்கொள்ளும் அடற்கொம் பாண்யானைக்குணமும், அதற் கடங்கி யுடனடக்கும் யானையினத்தின் ஒற்றுமையும், பகைகாணி லிளமொதுக்கிப் பொருதற்குத் தாமுந்துறுந் திறல்யானைகளின் பெருங்குணமும், தன்னலங்குறைத்துச் சமுகநலம்பேணுஞ் சமுதாயவாழ்க்கைவளத்தை வளர்ப்பதாகும்.

மாந்தரும், புலி கழுகு போல்வாரும் ஓநாயன்னாரும் நரி காக
நேர்வாரும் யானையினமொப்பவருமாகப் பலதிறப்படுவாராவர். தன்னய
மன்றிப் பிறிதின்பமறியார், துணைவேண்டாவலியுடையார், சமுதாய
வாழ்விகழ்ந் திகந்த கபந்தன் இடும்பன் பகன்போன்ற தறுகண்மை
அடலரக்கர் தனிவாழ்வார். விரும்புவனவனைத்துந் தாமே தேடி
யமைக்குந் திறனிலார், சமூகத்தாளாண்மையி ற்றன்னலந்தேடுவார்,
ஓநாய்நீர்மையர் சமுதாயவாழ்விகவாரேனும், அதன் நன்மைக்குழைக்க
விழையார். இன்னவர் சமுதாயவாழ்க்கைநல மறியாராவர். தன்னல
மறக்கொணாதார், இனத்தவர்கூட்டம் வேட்பார், காகமும் நரியும்போல
இனம்பேணிக் கூடிவாழ்வாரேனும், உண்மைக்கூட்டுறவின்ப முண
ரொணாதார். சுற்றத்தார்நலம்பேணும்விருப்பாற் சிறிது தன்னலக்
குறைவு வெறுக்காத சமூகவாழ்வுடையார், யானையினமொப்ப, ஓரினத்
தொருதுறை யொழுக்க வழக்கமுடையாரோடன்றிப் பிறருடன்
நெருக்கவாழ்வை விரும்பார்; இவர் நேசத்திற மினத்தளவேயாமாதா
லால். இவர் உண்மைச் சமுதாயவாழ்க்கைநலத்தை யொருதிறத்
துணர்ந் ததனைப் பேணுவாரெனினும், நிரம்பவிரியாத நேசநிலையும்,
தன்னலமறக்குந்தகைக்குறைவு மிவர்சமுதாயத்தைச் சுருக்கிக் கூட்டுற
வின்பத்தைக் குறைக்கும். பற்றுக் காரணமற்ற அகன்ற அன்பும்
தன்னலந்துறந்தும் பிறரின்பம்பேணும் பெருந்தகவும் விரும்பி வளர்ப்
பார்சமுதாயங்களிற்றான் சமூகப்பொதுவாழ்க்கையின்பத்தின்பெருக்
கும் முதிர்ச்சியும் காணலாகும். விலங்கு புள்ளினங்களின் சமுதாயங்க
ளெல்லாம், தத்த மினத்தளவில் எல்லைப்பட்டுநிற்கும். மக்கட்சமுதாயத்
திலேதான், இனத்தெல்லைச் சிற்றளவையிகந்து, சமயப்பொதுமை
ஜாதியொருமையாதி குறுகியகாரணப்பூற்றைப் பற்றுக்கோடாக்காமல்,
இன்பதுன்பங்களைச் சமூகப் பொதுப்பொருளாக்கிச் சமுதாயத்தொவ்
வொருவருடையவு மனைவருடையவு மாக்கம்பெருக்கு முண்மையுயர்
வாழ்வு சாத்தியமாகும். சிறிது தாழச்சிந்திப்பார்க்கு, "மக்களனைவரு
மோரினத் தொருபெருவகுப்பினரேயாவர்; பறவை மிருகங்களிடைக்
காணும் பிளவுபட்ட வேறு பல் பெருவகுப்புக்கள் (genera) மாந்த
ரிடைக் கிடையா; மனிதவருக்கமுழுது மொரு பெருவகுப்பாகுமன்றி,
உருவ வினை யுண வொழுக்கங்களில் ஒன்றொன்று வேற்றுமைகளாற்
பிரிவுபட்டுள்ள விலங்கினங்கள் பறவைப்பகுதிகளைப்போன்ற வகுப்பு

வகை மாந்தரிடைக் கிடையாது," என்பது விசதமாதும். இனங் கொணு மியற்கைவேறுபாடுகளாற் பிரிவுபட்ட புள் விலங்கினப் பெரு வகுப்புக்களின் முக்கிய அடையாளம், இருவதுப்பி னிருபாலிரண்டின் கூட்டுறவுமுயக்கம் பயன்தராது; அதனு லவற்றிடை இயற் பாலீர்ப்பு மில்லை.—(no natural sexnal attraction) மக்கட்பெரும்பகுதியி லிவ்வித இயற்கைப்பிள வில்லை. எவ்விருபாலாருக்கும் மணமு மகப் பேறு மியல்பாகும். இதனுலு மனிதசமுதாயத்துக்கு இனவரையறை யின்மை தெளியலாகும்.

கூட்டுறவை இயற்கைநெறிநலமாக் காதலியாமற் காரணக் கட்டுப் பாட்டளவில்மட்டுங் கூடிவாழ்வார், அவிழ்ந்தபொழு தகன்றேடும் நெல் லிக்காய்மூட்டை, களங்கடந்து, தளத்தலைவன்கட்டளையுங் கழிந்த பொழுது பிரிந்தொழியும் படைகள்போலக் கட்டளயிலேகூடிக் கட்டாய மில்லாதபோது விலகுபவர்கூட்டமேயாகும்; உண்மைச்சமுதாயமாகாது. சமுதாயங் கேவல மொரு வெறுங்கூட்டமில்லை; தனிவாழ்வுடையதொரு ஜீவியநிலையாம். ஜீவியநிலையுடைய ஒவ்வொன்றிற்குந் தனித்தொழி லுடைய பல வுறுப்புண்டு; ஆனல் உறுப்புக்கூட்டத்தைமட்டும் ஜந்து வாகக் கருதமுடியாது. உறுப்புக்களி னெருப்பட்ட தொழின்முடிவாகத் தனிவாழ்வுபெற்றுநிற்பதே ஜந்துவாகும்: அதன் வாழ்க்கைதான் ஜீவிய நிலையாம். உறுப்புக்களின் தனிவினைமை ஜீவ்யமாகாது; அதை வாழ்க்கையென்னும் வழக்கு மில்லை. தனி உறுப்புக்களின் வினை மையின் வேருய்ப் பலஉறுப்புக்களி னென்றிய வினைத்திரட்சியின் முடிவாய், அவற்றி னெருப்பாட்டி னெருப்பாடாவதே அவ்வுறுப்புக்களா லாய ஜந்துவின் ஜீவ்யவாழ்வாம். அதுவேபோல், சமுதாயவுணர்ச்சி யற்ற மாந்தர்கூட்டமெல்லாம் தனிவாழ்வுபெற் றுயிர்த்திலா வெறுங் கூட்டமேயாகும். உண்மைச்சமுதாயமாவது, அத னவயவமக்களின் தனிவாழ்வின் வேருய், அவர்களி னெற்றுமையுணர்வின் முடிவாய் ஒருப்பட்ட தனிவாழ்வுடைய தொன்றும். நிலைபெற்றவுண்மைச் சமு தாயத்தைத் தனக்கொரு தனி ஜீவ்யநிலையுடைய ஜந்துவுக்கு ஒப்பிட லாம். அவயவவினைகளின் வேருன தனிவாழ்வுடைய அவயவிபோலவே, தன்னகவுறுப்பா மாந்தரின் தனிவாழ்க்கைக்கு வேருய்த் தனக்கொரு தனிவாழ்வுடையதே சமுதாயமாம். அவயவியின்வாழ்வு எப்படி அவ யவங்களி னியல்புக்கும் தொழிலுக்கும் வேருயின மாறுபாடின்றிப்

பொருந்திநிற்குமோ, அப்படியே சமுதாயவாழ்க்கையும் அதிலுள்ள மக்களின் தனிவாழ்வுக்கு வேறுகி விரோதமற்றிருக்கும். யாதொரு அவயவி தன்னவயவங்களின் தனிவாழ்வைக் கெடுப்பானே, அவன் கெடும் அவயவத்தளவு தன்வாழ்க்கையையும் கெடுப்பானுவான். அவ யவமனைத்தும் தத்தந்தொழிலைத் தடையின்றி நடத்தி வளரச்செய்யு மவயவியே தன் பூர்ணவாழ்க்கையின் சம்பூரணசுகம் பெறுவானன்றே. உறுப்புச் சில கெடினும், உறுப்புக்களின் வினைமை சிறிது குன்றினும், ஜந்துவின் ஜீவியம் சம்பூர்ணமாகாது. உறுப்புக்கள் வேறுபட்ட இயல் பும் வினையு முடையவைகளாகவே, யாதோருறுப்பு மியல்புவினைமையில் தன்னிலை திரியின் அவயவியின்வாழ்வு மவ்வளவி லூறுபடும். பல திறப்பட்ட அவயவங்களின் வெவ்வேறுய வினை திரண்டே அவயவியின் வாழ்க்கைக் குயிரு மழகும் தருவதாகும். சமுதாயவாழ்க்கையு மவ் வகைத்தே. ஒரு சமுதாயமக்களின் தனிவாழ்வு சிறக்கச் சிறக்கச் சமுதாயவாழ்வுஞ் சிறப்பதாகும். மக்களின் தனிவாழ்க் கையை ஊறுபடுத்திச் சமுதாயம் நன்மைபெறுது. தன் னவயவ மக்க ளெல்லாரு மொருவகைப்பட்டு வேறுபாடெதுவுமின்றியிருக்க விரும்பும் எந்தச் சமுதாயமும், தன் உறுப்புக்களெல்லாம் ஒரு தன்மைத்தாக்கவிரும்பு மவயவியைப்போல் நலிந்துகெடும். அவயவி யின் வாழ்க்கைக்கு; எல்லாவுறுப்பு மவசியம். சிறந்ததாகக் கருதுங் கண்ணென்றே கொண்ட ஜந்துவின்வாழ்க்கை யென்னும்? காதும் மூக்கும் வேண்டாமா? கீழ்நின்றுநடத்துங் காலில்லாத வாழ்வு முட வாழ்வன்றே? உறுப்புக்களிற் கீழ்மேல் கிடையாது. அவயவியின் வாழ்க்கைக்கு அனைத்துறுப்பு மவசியமே. அவன் பாதுகாப்புக்கும் கவனத்துக்கு மனைத்துஞ் சரியுரிமை யுடையனவேயாம். சமுதாய நல் வாழ்வுக்கும், பலவேறுபட்டநிலையுந் தொழிலும் நினைவுந் திறனுமுடை யார் எல்லாரு மவசியமே; அவ்வனைவரையு மொப்பக்காத்துப் பேணுவ தும் சமுதாயத்தின் கடமையாம். தொழில்மறந் திடந்தவிரும் நாவைத் தன்றொழினடத்துழி யூறுசெய்யும் பல்லும் ஊறுபடும் நாவும் தத்தம் தொழிலை முறையாற்றி யொருவாயி லமைந்து மாறின்றி அவயவியின் வாழ்க்கையை வளர்ப்பதேபோல் தத்தம் அறந்திறம்பா தவ்வவர் தொழிலாற்றிப் பிறழ்ந்தார் பிழைபடினும் அவர்க் கூறுசெய்வது கருத் தின்றி அனைவரு மறமாற்றி யொருப்பட வாழும் மக்களையுடைய சமு

தாயம் நாள்தோறும் நலமுற்று வளரும். தங் கடனாற்றுவதி லிடை வந்த பிறர் நோவநேருவதல்லால், சமுதாயவாழ்வு பேணுவாரனைவரும் தாம் பிறர்நோவ நடவாம லறமாற்ற விரும்பல்வேண்டும். உய்த்துணரின் ஒவ்வொருவ ருண்மைநலமும் பிறர்நலம் பேணுவதேயாம்.

இனித் தமிழச்சமுதாயங் தற்காலம் நிலைகுலைய நிற்பதற்கு முக்கிய காரணம் ஜாதிமாற்சரியமேயாம். இத்தகை வேறுபாடுக ளென்று மிருந்திருக்க, முன்னில்லாத மாற்சரியவுணர்ச்சி தற்காலந் தடிக்கக் காரண மறியவேண்டும். தமிழகத்தே முன்னையவேறுபாடுகள், சமுதாயப் பொதுவாழ்வுக்கு மாறின்றி அவசியம்பற்றியும் வினைவகை இயல்புகள் காரணமாயு மெழுந்தனவாய்ப் பல்வகுப்பினரும் கீழ்மை மேன்மை யுணர்ச்சியின்றித் தத்தந்தொழி னிகழ்த்தி யொன்றிவாழ்தற் கிசைய வமைந்துநின்றன. சமுதாயவொற்றுமையும் இன்றியமையா வியற்கைச் சிறுவேற்றுமைகளுந் தம்முள் மாறின்றி யியைந்த விணக்கத்தால் தமிழச் சமுதாயவாழ்வு சிறந்துநின்றது. ஆரியவர்ணபேதங்களிற் பேதவுணர்ச்சி யுண்டோ, அன்றி யிடைப்புகுந்ததோ, அறிகிலேம். தமிழகத்திற் பகைமைவித்தாய பேதவுணர்ச்சி கிடையாதென்ப தொருதலை. நிலம் திணை தொழில்கள்பற்றி வேறுபட்ட தமிழர்பலரும், கீழ்மேலுணர்ச்சி யற்றுத் தகவும் தருணமு நேருங்கால் தம்முள் வரைவின்றி உணவும் மணமும் கையாண்டுள்ளார். ஆரியநாகரிகத்தொடு கலந்தபிறகும் ஆரியர் வருணமுறையனைத்துந் தமிழ்நாட்டில் வேரூன்றினதாயுமில்லை. என்றும் போலத் தொழில்பற்றிநின்ற வகுப்புக்களையே பலஜாதிகளாகப் பேசுவ தல்லால், வரன்முறையே மேலவர் இடையாவார் தாழ்ந்தவர் என்ற பிறப்புவகை வேறுபாடு கண்டதில்லை. “மேலவர் தாழ்ந்தாரிடைப் பெண்கொள்வதன்றித் தருவதில்லை; கீழவர் மேலவரிட முண்பதன்றி உண்பிப்ப தில்லை” என்றமுறைகள் ஆரியருட்போலத் தமிழருட் டமிழகத் தில்லை. சரிதமறியும் இடைக்காலந்தொட்டுத் தமிழ்நாட்டில் தச்சர் கொல்லர் மறவர் இடையர் வேளாளர் என்ற வினைவகை வகுப்புக்களுண்டேனும், உணவு மணவுரிமைகள் ஒருவருக்கு அதிகமும் மற்றவருக்குக் குறைவுமாக வேற்பட்டதில்லை. ஒவ்வொருவகுப்பினரும் தம்மைத் தாம் மதித்துப் பிறர் தமக்குத் தரா வுரிமைகளைத் தாமும் பிறருக்கு மறுத்துத் தம்மதுபோலப் பிறருரிமைகளையும் பேணிச் சமத்

துவபுத்தியொடு தம்மறமாற்றிச் சமுதாயநலம் வளர்த்துவந்தார். இன்றளவும் தமிழகத்தி லிவ்வாறே ஒவ்வொருவகுப்பினரும், தம்மைத் தாம் மதித்துத் தம்முட் டாமே மணந்து, பிறர்பால் உணவொடுமணமும் மறுத்தேவருகின்றனர். தமிழப்பார்ப்பனரும் தமிழக நாகரிகமுறையையே கையாண்டு தம்மை வேருக்கிவைத்தும், பிறரிடைத் தாந்தரா வுரிமைகளை விரும்பாமலும் பிறர் தம்மிற்றாழ்ந்தவரென்ற பேதவுணர்ச்சி பிறவாமலும் பிற தமிழரோ டொன்றிவாழ்ந்தமைவாரானார். அதனாற் சமுதாயநலம் குறையாமல் வளர்ந்துவந்தது. தற்காலமோ இச்சமத்துவ நல்லுணர்வுதளர்ந்து, சிலர் தம்மை மேலோராகத் தாங்கருதுவதோடமையாது பிறரையுந் தம்மேன்மைபாராட்ட விரும்புவாராயினர். இப்பிறழ்வுணர்ச்சியே சமுதாயவாழ்வுக்கு நஞ்சாயிற்று. இந்நச்சுணர்வு பிறக்கவுந் தடிக்கவும் முதற்காரணமாவார் யார் என்ற வினா அவசியமற்றது. யார் தவறேனும், தவறாலாய கேடு துடைக்கமுயல்வது சமுதாயவாழ்வை விரும்பு மனைவருக்கு மொத்தகடனேயாமாதலால், வீண்வழக்கிட்டுப் பகைவளர்த்துச் சமுதாயவாழ்வை யிழவாமல் உண்மைப் பாபரப்புடன் இம்மாற்சரியப் பொய்யுணர்ச்சியைக் கொன்று ஒற்றுமைவளர்க்கும் "வேற்றுமையில் சமத்துவ"புத்தியை வேரூன்றச்செய்து தமிழச் சமுதாயத்தை நிலைநிறுத்த விரைவோமாக.

சமுதாயவாழ்வுக்குச் சமுதாயவுணர்ச்சி தடிக்கவேண்டும்: சமுதாய நன்மைக்கு மாறான தன்னலமுண்டென்பதை ஒவ்வொருவரும் மறத்தல் வேண்டும். உரிமையெல்லாந் தமக்குங், கடமையெல்லாம் பிறர்க்குமாகக் கருதுபவரே சமுதாயப் பகைஞராவர். தமக்கேபோற் பிறர்க்கு முரிமையுண்டு; பிறர்க்குப்போலத் தமக்குங் கடமையுண்டு. உரிமையுங் கடமையுந் தம்முட் டொடர்புடையன; தனித்து நில்லா. தன்னுரிமை பிறர்கடமையாவதேபோல், பிறருரிமை தன்கடமையாமென்பதை மறக்கொணாது. உரிமையே பேசினும், கடமையே கருதினும், அகத்தும்

புறத்து மொப்பநிறுத்தித் தொழிலாற்றுவார் தப்பாத சமுதாயசேவை புரிவார். சமுதாயம் நிற்க; இந் நடுநிலைநினைவும் பிறர்பொருட்டுத் தன் னுரிமைதவிர்க்குந்திறமு மற்றவழிக் குடும்பவாழ்வே கூடாதாகும். தத்த முரிமை சில குறைத்துங் கடமை சில பெருக்கியும் வருவார்க்குத் தான், குடும்பமும் இனமுங் கூடுவதாகும். அன்றி அனவரதம் தம் முரிமைகளி லிறையுங் குறையஇடந்தராது பேணுவார்க்கு அடவிகளி லரக்கர்தனிவாழ்வே பொருத்தமாகும். தன்னலமு மின்பமுமன்றிப் பிறி துணராப் புலியும், காமத்துணையுடன் தன்னிரையைப்பகுத்துண்கிறது. இதுமட்டோ? தாய்ப்புலி புழைகாக்கத் தந்தைப்புலி தன்குறளைகள் வலிபெற்று வேறுகிவாழுமட்டும் அவைகளுக்கும் இரைதேடிக்கொடுத் தும் பகைகாத்துப் பேணியும்வருகின்றது. இவ்வாறு கொடும்புலி கூடத் தன்னலங்குறைத்தே தங்குலம்பெருக்குவதைப் பார்க்கின்றோம். தம்முரிமை சிறிதும்விடோமென்பார்க்கு எவ்விதக் கூட்டுறவுமே சாத்தியமில்லை. தன்னலத்துறவிலேதான் கூட்டுற வின்பவீடு திறக்கின் றது. உலகத்தில் மனித ரியல்பானு மவசியத்தானும் சமூகவாழ்வையே விரும்பவேண்டியவராதலால் அதற் கின்றியமையாத இத்தன்னலமறப் பையு மேற்கொள்ளாதிருக்க முடியாதவராகின்றார். இவ்வறமேற்கொண் டால், சமுதாயவாழ்வு சித்தியாய்விட்டதாகும். என்வே சமுதாயம் நெகிழ்வுற்று நலங்குன்றுவதற்கு முக்கியகாரண மிவ் வறவுணர்ச்சிக் குறைவேயாகும்; ஜாதி மத வேற்றுமைகள் உண்மைக்காரணமாகா. சமுதாயவுணர்ச்சியும் தன்னல்மறக்குந்திறனுந் தழைபுமாயின், சமு தாயந் தலைநிமிர்ந்து வளம்பல வளர்வதாகும்.

நம் பாரதசமுதாயங்களும், அறிவெட்டுந் தொலைக்காலமுதற் பல்வேறுபட்ட மக்களாலாய்ப் பகைமையும் பழியு மின்றித் தகைமை யிற் றழைத்துள்ளனவாகக் காண்கின்றோம். வசிஷ்ட விசுவாமித்திர வாதத்தாலும், பிராம்மண பௌத்தப் பிணக்காலும், ஹிந்து முஸ்லீம் நெருக்காலும், சைவ சமணச் சண்டைகளாலும், தென்கலை வடகலை

வெறியாட்டாலும், ஹிந்துஸ்தானத்திலேனும் தமிழகத்திலேனும் சமுதாயவாழ்வு நிலைகுலைந்ததில்லை. மகம்மதியரும் மகாராஷ்டிராரு மாறுபட்டு மலைந்தபோதும், பாரதபூமியிற் சமுதாயவாழ்வு கெட்டதில்லை. கங்கை வளநாடுவிட்டு நெட்டிடைக் கொடுவனநீந்தி வந்துற்ற ஆரிய அந்தணரை யன்போடாதரித்து அவரறம்பேணிவாழுமாறுதவிய தமிழகம், நாளடைவில் அவ்வந்தணரைத் தம்மொழிமறந்து தமிழ்வளர்க்கச்செய்து, வேறின்றித் தன்னகப்படுத்திச் சமுதாயவாழ்க்கையின்பத்தைவிரித்துப்பெருக்கி வளம்பட வளர்த்து நலம்பெற்றது. பின்வந்த பௌத்த சாக்கியரையு மப்படியே தன் சமுதாயவாழ்வி லாழ்த்தி யமைத் தழகுபெற்றதோடு, தமிழகம் கிறிஸ்தவர் யூதர் மகம்மதியராதி அயனாட்டாரையு மசட்டை செய்யாம லாதரித்திழுத்துத் தழுவித் தழைத்துநின்றது. தொன்றிப் படி நின்றுநிலவிய சமுதாயப்பெருவாழ்வு தற்காலம் தளர்வுற் றலைப் படக் காரணம் சமுதாயவுணர்ச்சிக்குறைவுந் தன்னலவிருப்ப மிகையு மன்றி வேறின்று. ஜாதிசமயவேறுபாடு நாட்டுக்கும் நமக்கும் புதிதில்லை; தற்காலத் தடுமாற்றந் தவிர்த்துச் சமுதாயவாழ்வை நிலைநிறுத்தி முன்னினுஞ் சிறக்கச்செய்வதற்குரியவழி தேடவும் நடக்கவு மரிதுமில்லை. உயிரனைத்துமொப்ப வோம்பு மருட்பெருமான் கௌதமனும், தனக்கு நிரயநிலையை விலையாக்கியேனும் சமூகத்தாருக்கு முத்தி தேடு மாசைமேலீட்டால் ஆசாரியன் ஆணைமீறி மூலமந்திரத்தை அனைவருமறிய முழக்கஞ்செய்த அருட்டுறவி இராமாநுஜரும் பிறந்தநாட்டவராய நாம், சமுதாயவாழ்க்கை வளர்ப்பதற் குரியவழி கடைப்பிடிக்கப் பின்னிடைவேமோ ?

நமக்கு நாம் விரும்புமளவிற் பிறருந் தமக்கு நலம்விரும்புமியல்பை மறவேமேல், சமுதாயவாழ்க்கைநலம் நம்பால் வழிதேடி வந்தடையும். தாம்பெறவிழைவதேபோற் பிறர்மாட்டுஞ்செயத்துணிவதே தருமமாகும். அன்பு நிறையு மறத்துறையு மதுவேயாம். சமயத்திலோ மற்றைச் சதகோடி யுரிமைத்துறைகளிலோ பிறர் நம்வழியிற் றலையிடவேண்டே

மாகையால், பிறர்பேணுமுரிமைவழிகளில் நாமு மெவ்வகையினுந் தலை யிடல் தவிர்த்தல்வேண்டும். தமக்குரிய கோழியாடுகளைக் கொல்லுமுரி மைவிடாத ஹிந்துக்கள், முறைகடவாது தமக்குரியபசுவைத் தம்மிஷ் டப்படிசெய்யுமுரிமையை முஸ்லீம்சோதாருக்குமறுப்பதென்னமாகும்? உயிர்க்கொலையை அறவெறுக்கு முயர்ஞான சமயத்தாரும், பலிவிரும்புந் தெய்வவழிபாடுடையார் கொலைப்பலியைத் தடுப்பதில்லை. பலிப்பொரு ளை நெறியிற் றமதாக்கிப் பின் கொல்லுவதை வலியாற் றடுப்பது தவ றென்ப தறியும் நம்மவர், பிறருடைமையில்லாத் தம் பசுவைத் தஞ் சமயவிதிகடவாத மகம்மதியர் வழிபாட்டுமுறையிற் கொல்லுமுரிமையை வலிந்து தடுக்க முயல்வது அறமாமா? பசுப்பேணல் நம்மதமாயின், பசுப்பலி அவர் சமய அறமாவதை மறுப்பதும் மறத்தலும் முறை யாமா? சமயக்கடனளவிற் பசுப்பலியை நிறுத்தவும், நம்மவர் சமய வுணர்ச்சியைமதித்துப் பசுக்கொலையைக் கூடியவரை குறைக்கவும் மறைக்கவும் நம் பாரத சமுதாய சோதரரான மகம்மதியரை நாம் நேச முறையில் மன்றாடிக்கேட்குமுரிமை நமக்குண்டு. மாற்சரியமின்றி அன்புவழியி லவர்பாற் குறையிரப்பின், அவரும் நம் வேண்டுகோளை மதித்திணங்கும் நேசக்கடமையை மறவார். அதைவிட்டு அவருரிமையை நாம் வலிந்து மறுப்பின், நாந் தவறிழைப்பதோடு வலிகொண் டவர் மோதிப் பகைக்கவு மவர்க்கு நாமே வழிகாட்டுவது மாகும்.

இனி நம் மகம்மதிய கிறிஸ்தவ சோதரர்கள் தத்த மாலயங்களில் தொழுகை ஆராதனைகள் நடக்கும்போது, கோவிலின்முன் எவ்விதஒலியு மெழாதபடி காப்பது தங்கள் சமயக்கடனாகக் கருதுகின்றனர். தெருக் களிற் பிறர்க்கிடையூறின்றி ஊர்கோலம் உலாக்கள் நடத்தவும் பஜனை இசைமுழக்க மியற்றவும் ஹிந்து சமயத்தவருக் குரிமையுண்டு. ஆனால் நமது கிறிஸ்தவ மகம்மதிய நண்பர்க ளிவ்வுரிமை நாங்கொண்டாடுவதை வெறுப்பதோடு, தொழும்பொழுது மட்டுமல்ல எப்போதுமே தங்கள் கோவில்முன் எவ்விதபஜனை இசைமுழக்கமும் யாரு மெதுபற்றியுஞ்

செய்யவிடேமெனத் தடுக்கவிரும்புகின்றனர். வலிந்து தடுப்பது அவர் பால் தவறேயாம். ஆனு லவர்சமயவுணர்ச்சியைமதியாமல் அவர் தொழுகைமத்தியிலும் நா மொலியெழுப்பி யவரை நோவப்பண்ணுவது ஒற்றுமைபுணர்ச்சிவளர்க்கும்வழியாமா? உரிமை நமக்குளதேனும், நேசத்தோடு அவர் சமயவுணர்ச்சியை நன்குமதித்துத் தொழுகைக் காலங்களிலேனும் நா மிசையை அவராலயங்களினருகில் நிறுத்தின் நம்நட்பைவிரும்பித் தம்முரிமைகளிற் சிலவற்றை நமக்காக அவர் விட்டுக் கொடுப்பார். சிறிது தூரம் சிறிதுநேர மிசைநிறுத்துவதி லெவ்விதக் கஷ்ட நஷ்டமும் நமக் கேற்படுவதில்லை. சமயநெறி யவசியமற்றவிடத்தி லும் ஹிந்துக்களினிசையுரிமையை மறுக்க மகம்மதியர்விரும்புவது மவசியமற்ற தவருகும். இருதிறத்தவரு மொருநாட்டி லொன்றிவாழு முரிமையுங் கடமையு முடையராயிருக்கப் பரஸ்பரம் சமயக்கொள்கை களையு முணர்ச்சிகளையும் மதித்துப்பேணி அவசியமற்ற வீணுரிமை களைப் பாராட்டாமல் விடுத்து நட்பொடு நலத்தையும் வளர்க்கவிரும் பாது பகைமைவிதைதேடிவிதைப்பது அறிவுடைமைக்கழகாமா? இரு வரும் தத்த முண்மைநலமுணர்ந்து ஒன்றிவாழ்வதே முறையாமன்றோ? பரஸ்பரஞ் சிறுவேறுபாடுகளைப் புறக்கணித்து மதக்கடமைகளை மதித்து நேசித்தொழுகநினைப்பதே அறத்துறையும் நெறிமுறையும் நிறைநலனு மாம்,

ச. சோ. பாரதி,

ஸ்ரீ:

# நத்தம்போற்கேடென்னும் குறளுரை.

தமிழ்ப்பொழி லென்னுந் திங்கள்வெளியீட்டின் கடைமுறை வெளிப்போந்த மாசி-பங்குனிப்பகுதியில், திருவாளர் பண்டித. ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் 'ஒரு குறட்பா' என்ற கட்டுரையொன்றனை எழுதிவிடுத்தனர். அது, "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்னுங் குறளுரையின் ஆராய்ச்சியாக அமைந்துளது. அதனுட் பெரிதும் பொருந்தாமைகண்ட யான், அதனைக் களைந்துகொள்ளற்பொருட்டு, அப்பொழுதே, 'நத்தம்போற்கேடென்னுங் குறளுரை' என்ற கட்டுரையினை வரைந்து அப்பொழிலின் இதழாசிரியர்க்கு அனுப்பினேன். ஆயினும் அஃது இதுகாறும் வெளிவாப்பெறாது காலந்தாழ்த்தமையின் ஈண்டுச் செந்தமிழ்வாயிலாக வெளியிடுதல் இன்றியமையாததாயிற்று.

முதன்முதலாகப் பண்டிதரவர்கள், 'நத்தம்போற்கே' டென்னுங் குறட்பாவிற்கு ஆசிரியர் பரிமேலழகரும் மணக்குடவரும் உரைத்த உரைகளைத் தனித்தனி எடுத்துக்காட்டி, "இருவர்கருத்தும் முரண்படாமை காணற்பாலது" என ஒருவகைபாக முடிவுகட்டிச் செல்வாராயினர். ஆயின் ஆழ்ந்துநோக்குங்கால் அவையிரண்டற்கும் முரண்பாடுண்மை அறியப்படுதலின் அஃது ஈண்டுச் சிறிது விரிப்வுரைக்கற்பாலது.

"புகழுடம்பிற்கு ஆக்கமாகுங்கேடும், புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரப்பாடுடையார்க்கல்லது இல்லை" என்பது பரிமேலழகருரை. "ஆக்கம்போலக் கேடும் உள்தாகுற்போலச் சாதலும் வல்லவற்கல்லது அரிது" என்பது மணக்குடவருரை. பரிமேலழகருரையில், 'ஆக்கமாகுங்கேடு—புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல்' என்றும், 'உளதாகுஞ் சாக்காடு—புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல்' என்றும் விவரணமுரைக்கப்பட்டுள்ளது. மணக்குடவருரையில் இத்தகைய குறிப்பொன்றுமின்மையால் அதன்கருத்து நன்கு விளங்குவதின்று. 'ஆக்கம்போலக் கேடு,' 'உளதாகுற்போலச் சாதல்' என்பன தெளிவாய்ப் பொருளுணர்த்திடப்படுவனவாகா என்பது வெளிப்

படை; ஆகலின் இங்கிலையில் அதனைப் பரிமேலழகருரையோ டொற்றுமையுடையதாகத்துணிவது எவ்வாறுபொருந்துமென்று தோன்றவில்லை.

'ஆக்கம்போலக்கேடு' என்றதனை ஆக்கம்போலத்தோன்றுங் கேடு என்றின்னணம் ஒருவகையான் விரித்துரைக்கலாகுமெனினும், அதனை 'வல்லவற்கல்லது அரிது' என்னுஞ் சொற்றொடரோடுகூட்டிப் பொருள் காணுமிடத்து, அது மிகவும் பொருத்தமிலதாய் ஒழிகின்றது. எங்ஙனமெனிற் கூறுவன். தோற்றமாத்திரையின் ஆக்கம்போற்காட்டி உண்மையிற் கேடாகவேமுடிவதொன்றையடைதல் வல்லார்க்கே எளிதாவதன்றி மற்றெல்லார்க்கும் அரிதாம் என்பதே அதன் போந்த பொருளாகவேண்டும். ஆகவே அது பரிமேலழகருரையுடன் முழுவதும் முரணுடையதாவதல்லது பிறிதில்லையென்க.

இனி, 'ஆக்கம்போலக் கேடு' என்றதனை முன்பின்னாக மாறிக் கேடுபோன்றேன்றும் ஆக்கம் எனப் பொருள்கொள்வோமெனின் அங்ஙனமாய குறிப்பொன்றும் அவ்வுரையிற் காணலாகாமையானும், 'உளதாறற் போலச் சாதல்' எனக் கண்ணழிவு கூறியுள்ளமுறை அதற் கிடந்தராதாகலானும், தரினும் அது பெரிதும் இடர்ப்படுவதாகலானும் அது சிறந்தபொருளன்றென் மறுக்கற்பாற்று. அன்றியும் அது சிறப்புடையதாயின் மணக்குடவருக்குக் காலத்தாற் பிற்பட்ட பரிமேலழகர் தாமும் அங்ஙனம் உரைசெய்தல் தவிர்ந்து 'போல்' என்பதனை உரையசையாகக் கூறிவிடுத்த லென்னை? ஆகலின் மணக்குடவர்கருத்திற் கிணங்கப் போலென்பதனை உவமச்சொல்லாகவே நிறுத்தி உண்மைப் பொருள்காணுதல் எளிதினியலாதென்பஃது தெளிவாயிற்றென்க.

அஃதொருபுறமிருக்க; இக்குறளுக்கு வேறுவகையாகப் பொருள் காணும் விழைவுடையராகிப் பண்டிதரவர்கள் தாம் கைப்பெற்றுள்ள ஏதோ ஓரேட்டுச்சுவடியை ஆதாரமாகக்கொண்டு சிலவற்றை எழுதலாயினர். அவ்வுரையின் வன்மைமென்மைகளையும் ஈண்டாராய்தல் அமைவுடையதாகும்.

'பெயரறியப்படாத ஒருவரதுரையுடன்கூடியது' என்று சொல்லப்படும் அவ்வேட்டுச்சுவடியுள், "சங்கரபிரஞ்சூழவாழும் வலம்புரிபோலச்

கிளையானது தன்னைச்சூழவாழ்தல் கீர்த்திமானுக்குக் கைவரும்" என்னு மிவ்வளவும் நத்தம்போற்கேடென்னுங் குறளுக்கு உரையாக வரையப் பெற்றுள்ளது. அக்குறட்பாவோடு இவ்வுரை எவ்வளவாக இயை புடைத்தென்பதனைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தல்வேண்டும். சிந்திக்கவே, அது திருக்குறளின் நேரான பதவுரையென்றுதல் அன்றிப் பொழிப் புரையென்றுதல் கொள்ளற் கிடமில்லை. மற்று அது ஏதோ ஒருவகை யான கருத்தினைப் புலப்படுக்கின்ற ஒரு போலியுரையெனவே புறக் கணிக்கற்பாலது. அவ்வாறாகவும் பண்டிதரவர்கள் அதனை ஒருசான் றாகமேற்கொண்டு, அதில் "நத்தம் என்பதற்கு வலம்புரி எனப் பொருள்கொள்ளப்பட்டிருப்பது வெளியாகிறது" என முடிவுசெய் திருப்பது பெரிதும் பொருந்தாமையுடையதேயாகும். அக்குறளின் பெரும்பான்மையான சொற்களுக்கு அவ்வுரையிற் பொருள்காணப் பெறாமையோடு, 'நத்தம்போற்கேடு' என்னுந் தொடராளவிற்கேனும் அதில் நேரிதான உரையுண்டோவெனில், அதுவுமின்று. ஆகலின் அவ் வுரையின் ஆதாரவுகொண்டே நத்தமென்னுஞ் சொல்லுக்கு வலம்புரி யெனப் பொருளுண்டென்று எளிதாகத் துணிந்துவிடுதல் எவ்வாறு ஏற்கும்? 'போல்' என்பதை அடுத்துள்ளமையால் அஃது அறியப்படுமே எனின், அதனையடுத்துள்ள கேடென்னுஞ் சொல்லுக்குக் கிளையெனப் பொருள்கொள்ளப்பட்டது என்றலும் பொருந்திற்றாகல்வேண்டும். அன்றியும் அதில், 'சாக்காடு' என்பதற்குச் 'சூழவாழ்தல்' எனப் பொருளுரைக்கப்பட்டதென்றலும் குற்றமாகாமைவேண்டும். ஆகவே, நத்தமென்னுஞ்சொற்பொருள் துணிதற்கண் இவ்வுரையினை ஏற்றசான் றாகக்கோடல் இயலாததே யென்க.

இனி, "சங்குடைந்தனையவெண்டாமரைமலர்த்தடங்கள்போலும்— நங்குடி" என்னுஞ் சிந்தாமணியுரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர், இத்திருக்குறளை மேற்கோளாக எடுத்தோதுமுகத்தானே, நத்தம் என் பதற்குச் சங்கு எனப் பொருள்கொண்டுள்ளமை புலனும் எனப் பண்டித ரவர்கள்கூறுவதைச் சிறிது விசாரிப்பேன். "தடங்களிலே உடைந்த தன்மையவாகிய மலரும் சங்கும் போலும் நங்குடி; இது தூய்மைக்கு உவமை; இனிச் சங்கு கெட்டாலும் நிறங்கெடாததுபோலக் கெட்டா லுந் தன்றன்மைகெடாதகுடியுமாம்; 'நத்தம்போற்கேடும்' என்பः" என்பதே அவ்வுரைக்குறிப்பாகும்.

இவ் வுரைக்குறிப்பைத் தமக்கு ஆதாரவாக எண்ணிப் பண்டிதரவர்கள், "பிற்பொருளிற் சங்கு உடைந்தனைய குடி என இயையும்; சங்கு கெட்டாலும் நிறங்கெடாததுபோலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியென்று கூறியவர் அதற்கு மேற்கோளாக 'நத்தம்போற்கேடும்' என்பதனைக் காட்டியிருப்பதிலிருந்து, அவர் நத்தம் என்பதற்குச் சங்கென்று பொருள்கொண்டுள்ளமை புலனும்" என்று எழுதியுள்ளார்கள். ஆனல் அச் சிந்தாமணியுரையை விரித்துரைக்குமுகத்தான் அதுவே தீர்ந்தமுடிவாகாதென்பது தெளிவிக்கலாகும்.

சங்கும் வெண்டாமரைமலருமாகிய இரண்டுவமைகள் ஆண்டுப் பயின்றுவருகின்றன. அவையிரண்டும் குடியின் தூய்மையை விளக்குவன என்பது முதலுரையின் கருத்து. அவற்றைத் தனித்தனி பிரித்துத் 'தூய்மை'க்கு மலரும், 'கெட்டாலும் தன்தன்மை கெடாமைக்'குச் சங்கும் உவமைகளாக எடுத்தாளப்பட்டன என்பது இரண்டாவது உரையின் குறிப்பு. இரண்டுரையிலும் உடைந்தனைய என்பது மலருக்கு அடை. உடைந்த(அலர்ந்த) தன்மையவாகிய என்பது அதன் பொருள். ஆகவே நச்சினர்க்கினியர் அனைய என்பதை உவமச்சொல்லாகக் கொள்ளவில்லையென்பது தேற்றம். அங்ஙனமாகவும் பண்டிதரவர்கள், "பிற்பொருளிற் சங்குடைந்தனையகுடி என இயையும்" எனக் கூறியிருப்பது ஆசிரியர்கொள்கைக்கு மாறுகொளக்கூறலாமென்க. அன்றியும், சங்கு உடைந்தகாலத்தும் நிறம்வேறுபடாததுபோலுந் தன்மையையுடையகுடி என அதற்குப் பொருள்கொள்ளல்மாயின், உடைந்தகாலத்தும் நிறம்வேறுபடாமை மற்றெல்லாப்பொருள்களிடத்தும் உளதாயிருப்ப அதற்குச் சங்கினையே எடுத்துக்காட்டுதல் ஏற்புடையதாகாது.

மற்று நச்சினர்க்கினியர்கருத்தின்படி பிற்பொருளிலும் 'சங்கு போலுங் குடி' எனவே இயைத்துப் பொருள்காணுதல் அமையும்.

அதன் பொதுத்தன்மைமட்டில் இங்கு வேறுவகையாக விரித்துக் கொள்ளற்பாலது. "சங்கு சுட்டாலும் வெண்மைதரும்" என்பவாகலின் கேட்டிலும் நிறங்கெடாத அதனியல்பு நன்குபெறப்படுமென்க. சங்கிற்குக் கேடாவது தீயினாற் சுடப்படுதல். நெருப்பினுட்பட்டவாறே பிற பொருள்கள் நிறமிழப்பனவாகவும், சங்கு தன் வெண்மையின் அழியாது விளக்கமுற்றிருக்கும்; அதுபோலக் கேடுற்றவிடத்தும் தன் தன்மையிற் குன்றாத குடி என அதன் பெருமைதோன்றக் கூறியதாகப் பொருண்முடிவு கண்டுகொள்க இனிப் பண்டிதாவர்கள்கருத்திற் கிணங்க, 'சங்குடைந்தனைய குடி' எனப் பிறவாறியைத்துப் பொருள் கொள்வதாயினும், உடைதல் என்பதற்குத் தீயினாற்சுடப்படுதல் என உரைகூறுவது மிக இடர்ப்பாடுடைத்து.

இங்ஙனமே 'நத்தம்போற்கேடும்' என்பதை நச்சினார்க்கினியர் மேற்கோள்காட்டியதினின்று, அவர் நத்தமென்பதற்குச் சங்கெனப் பொருள்கொண்டாரெனப் பண்டிதாவர்கள் ஒருதலைதுணிந்தமையும் ஒவ்வாமையுடைத்தென்க. 'நத்தம்போற் கேடு' என்பதற்குப் பரிமேலழகருரையைத் தழுவியே நச்சினார்க்கினியரும் ஆக்கமாகுங்கேடு எனப் பொருள்கருதியுள்ளாரென்றல் ஆண்டைக்கேற்புடையதே யாகின்றது. (சங்குகெட்டாலும் நிறங்கெடாததுபோல) கெட்டாலும் தன் தன்மை கெடாதகுடி எனக் குடியின்பெருமையை மேலே கூறிப்போந்தவர், அப்பொருளை வலியுறுத்தற்கு, அங்ஙனம் வறுமையடைந்தகாலத்தும் தன் தன்மையிற்குன்றாது ஆக்கமுற்றுவிளங்குதல் புகழ்படவாழுங் குடிப்பிறந்தார்கண்ணே உளதாம் என்னுங்கருத்துள்ள, "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்னுந் திருக்குறளை முதற்குறிப்பினால் நினைப்பூட்டிச்சென்றனரெனக்கொள்ளுதலில் யாதோரிழுக்குமின்று. அங்ஙனங் கொள்ளுங்கால் நத்தமென்னுஞ்சொல்லுக்கு ஆக்கமென்னும்பொருளையே ஆசிரியர்நச்சினார்க்கினியரும் கருதினாராவர்.

ஆகவே அவர் அதற்குச் சங்கென்னும் பொருள்கொண்டா ரென்றலும் தெளியப்பட்டதாகாதென்க.

இங்ஙனன்றி அவர்க் கதுவே கருத்தாகக்கொள்ளின் அவ்வுரை பரிமேலழகருரையோ டொப்ப அத்துணைப் பெருமையுடையதாகக்கூற இயலாது. 'நத்தம் (ஆக்கம்) ஆகுங்கேடு' 'உளதாகுஞ்சாக்காடு' என ஒன்றற்கொன்று முரணுடையவாய்த் தொடைபெற்றுள்ள சொற்களாலாய அவ் விருதொடர்களினும் அமைந்த ஒற்றுமைநயம் குன்றிச் செய்யுளின்பம் சிதைந்துவிடுவதூஉமல்லாமல், 'சங்குபோலுங்கேடு...... வித்தகர்க்கல்லா லரிது' என்னும் அவ்வுரையுள் மிக நலிந்து பொருள் காணவேண்டியுமிருத்தலால் அது ஆசிரியர்கருத்தொடுபட்ட சிறந்த வுரையெனக்கொள்ளற் கிடமின்று. ஆதலால் இதனை உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உடன்பட்டதொன்றாகக் கூறுதல் அத்துணைப் பொருத்தமுடைய தன்றென்று தோன்றுகிறது ஆயினும், இஃ தறிஞர்களா னாய்ந்து முடிவுரைக்கற்பாலது.

இதுகாறுங்கூறியவாற்றால் "நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க் கல்லா லரிது" என்னுந் திருக்குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகர்கண்டவுரையே அமைவுடையதாகுமென்பதும், மணக்குடவரும் பிறரும் உரைத்தன அதனொடு மாறுபடுவன என்பதும், நத்தமென்னுஞ் சொல்லுக்குச் சங்கெனப்பொருளுரைத்தல் நச்சினார்க்கினியர்கருத்தன்றென்பதும், அங்ஙன முரைக்கும் பொருளும் அத்துணைச்சிறப்பினதன்றென்பதும் பிறவும் ஒருவகையாக உணர்த்தலாயின.

T. N. அப்பனையங்கார்,

மதுரை.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[சகசுஐ-ம் பக்கத் தொடர்ச்சி.]

## சித்திரகூடப் படலம்.

இராமன் சீதைக்குச் சித்திரகூடமலைவளங்காட்டிச் சென்று அந்த மலையிலே இலக்குமணன்சமைத்த சாலையிலே தங்கித் தவஞ்செய்ததைச் சாற்றுவது.

[இராமன், சீதைக்கு, வழிநடக்கும்போதே மலைவளங்கூறுவானாய், "உடைவாளும் வடிவேலும் ஒன்றுகூடினாற்போல ஒளியும் கூர்மையும் ஒருங்குடைய கண்ணினாய்! இந்த மலையும் இதன்மீது படிந்திருக்கும் சூல்மேகமும் வேற்றுமைதெரியாதனவாய்விளங்குதலை நோக்குவாயாக. மலையாடுகள் மரகதமணிகள் [1]மலிந்து [2]வயங்கும் [3]வளாகங்கள்மீது [4]வாவிச்செல்லும்போது, அம்மணிகளின் பச்சொளி பரவப்பட்டுப் [5]பகலவனுடைய பச்சைக்குதிரைகள் ஒப்பத் திகழ்வதைப் பார்ப்பாயாக" என்றான்.]

312. "வடம்கொள் பூண்முலை மடமயி லே! மதக் கதமா
அடங்கு பேழ்வயிற் றரவுரி அமைதொறும் தொடக்கித்
தடங்கள் தோறும்நின் றூடிவ, தண்டலை அயோத்தி
நுடங்கும் மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்."

இ-ள். "(இரத்தின) வடங்களைக்கொண்ட (மாலை ஆகிய) ஆபரணத்தை அணிந்த தனங்களையுடையாய்! ஆனைகள் அடங்கும்படியான பெரியவயிற்றினையுடைய (மலைப்) பாம்புகளின்தோல்கள் மூங்கில்கள்தோறும் தொடக்குண்டு (நாம்செல்லும்) வழியெல்லாம் (காற்றால்) அசைபவைகள் அயோத்திநகரத்துமாளிகைகளில் அசைகின்ற சேலைக்கொடிகள்போல்பவற்றைப் பார்ப்பாயாக" (என்றான் இராமன்).

---

1. மலிந்து—மிகுந்து. 2. வயங்கும்—விளங்குகின்ற. 3. வளாகம்—இடம். 4. வாவி—தாவி. 5. பகலவன்—சூரியன்.

மதக்கதமா - மதத்தினையும் கோபத்தினையும் உடைய யானை. 'மழை மதமா' என்றும் பாடம். பேழ்—பெருமை. உரி—தோல். அமை—மூங்கில். தடம்-வழி. தண்டலை-சோலை. நுடங்குதல்-அசைதல். (பத்துப்பாட்டு). 'அயோத்தி (நகரத்து) மாளிகை (யில்) நுடங்கும் துகிற்கொடி' யெனக் கூட்டிக்கொள்க.

313. "சீலம் இன்னதென் றருந்ததிக் கருளிய திருவே!
நீல வண்டினம் படிந்தெழ, வளைந்துடன் நிமிர்வ,
சோலை வேங்கையின் கொம்பர்கள், பொன்மலர் தூவிக்
காவி னிற்றொழு தெழுவன நிகர்ப்பன, காணாய்."

இ-ள். "(சிறந்த கற்பின்) ஒழுக்கம் இப்படிப்பட்டதென்று (ஒழுகிக்காட்டிக் கற்பிற்சிறந்த) அருந்ததிக்கு (க் கற்பித்து) அருள்செய்த இலக்குமீ! நீலநிறமுடைய வண்டுக்கூட்டம் (தம்மேற்) படிந்து எழ, (படிந்தபோது தாம் பூமியைத் தொட) வளைந்து (எழுந்தபோது தாமும்) உடனே எழுவனவாகிய வேங்கைமரக்கொம்புகள் (அவ்வாறு வளைந்து நிமிரும் அசைவினால், தமது மஞ்சள்வண்ணமான மலர்களை உதிர்க்காநின்று, அருச்சனைத் திரவியமாகப்) பொன்மலர்களைத்தூவி (ப் பூமியிற் படிந்து உன்) காலில் விழுந்து பணிந்து எழுந்திடுகின்றவை போல்பவைகளைப் பார்ப்பாயாக" (என்றான் இராமன்).

'உடனிமிர்வ' என்பதை 'உடன் நிமிர்வ' என்று சந்தி பிரித்தலன்றி 'உடல் நிமிர்வ' என்றும் பிரிக்கலாம். 'காவினிற்றொழுது' என்பதை 'நின்காவில் தொழுது' என்றும் 'காவில் (விழுந்து) நின்(னைத்) தொழுது' என்றும் கொள்ளலாம்.

["வேடுவர் தினைப்புனங்காக்கவைத்திருக்கும் பறைகளைச் சில குரங்குகள் அடித்து முழக்குவதையும், மா, பலா, வாழைகளில் வேறு சில குரங்குகள் பழக்கள்பறிப்பதையும், கிழங்குகளெடுக்கப் பன்றிகள் மண் பறிப்பதையும், உயர்ந்த மரக்கொம்புகளில் தொடுக்கப்பட்டுத்தொங்கும் ஊஞ்சல்களில் வேடுவமக்களிர் பாடிடுதலையும், அவர் பாட்டுக்கேட்டு அவர் மாட்டுக் [1]கேகபப்புள் விரைவொடு வருதலையும், மலையின்உச்சியில் மத்தியானசூரியன் வயக்குதல், மலைமுடியில் வயிரமுடியைக் கவித்ததைநிகர்ப்

1. கேகயம் — குயில்.

பதையும், நிறைபப்பூத்த முருக்கவிருக்கம் நெருக்கமாகவிருக்குமிடத்தில், காடு தீப்பட்டெரிவதுபோலக் காணப்படுவதையும் கண்ணுறுவாயாக" என்று, இராமன் சீதைக்கு மலைவளங்காட்டிக்கொண்டு வழிச்செல்லும்போது, அங்குள்ளமுனிவர்கள் எதிர்கொள்ள, வணங்கி, அவர்களுக்கு விருந்தானன்.

அங்கே, இலக்குமணன், மூங்கில்களைவெட்டி, குறிய துண்டு கொண்டு தூண்நட்டு, நெடிய துண்டுகொண்டு முகட்டிலும் நாற்புறங்களிலும் விட்டமிட்டுக் கிளைகளை வளைகளாகவும் வரிச்சுக்களாகவும் விரிச்சுக் கொடிகளைக் கயிறுகளாகக்கொண்டு அவைகளை விலகாமற்கட்டி, மேலே தேக்கிலைபரப்பி, அதன்மேல் நாணற்புல்லாற் கூரைவேய்ந்து, மூங்கில்களைக்கொண்டே சூழவும் சுவர்கள்போக்கி, அவைகளைக் குழைந்த மண் கொண்டு மறைத்து, நீர்தெளித்து மெழுகித் தாசரதி தங்குதற்குச் சாலை சமைத்தான். அவ்வாறே மைதிலி வைகுதற்கு மற்றொருசாலை வகுத்து, அதன் சுவர்களைக் குங்குமக்குழம்புபோன்ற செக்கச்சிவந்த சேற்றினால்தீற்றி, ஆற்றிலேபொறுக்கிய பொன்னும் மணியும் பதித்து, மென்மயிற்பீலியால் விதானம் அமைத்து, அடித்தளத்திற் புதுப்பூச் சிதறி அழகும் இனிமையும் அமையச் சமைத்தான். அச் சாலையில் இராமன் சீதையுடன் குடிபுகுந்தான்.

அந்தச்சாலை, மாயை நீங்கியவர் மனமென்றும் மாமறையென்றும் திருப்பாற்கடலென்றும் சீவைகுந்தமென்றும் செப்பலாம்படியிருந்தது. அவை யெல்லாவற்றினும் சிறந்ததாக, அரும்பெறலன் பார்ந்த இலக்குமணன் இதயத்தில் விருப்புடனிருக்குதல்போல, இராமன் அச்சாலையில் இருந்தான். இருந்தவன், 'சீதையின் மெல்லிய பதங்கள் கல்லிடை நடந்தன', 'இலக்குமணனது மேன்மையானகைகள் தாழ்மையான வேலைசெய்து சாலை சமைத்தன' வென்றெண்ணி, இளையவனை நோக்கி "இந்தத்தொழில் என்று கற்றாய்" என்றுகூறிக் கண்ணீர் சொரிந்துகொண்டு "சக்கரவர்த்தியின் ஆணைப்படி நடந்து புகழ் பெற்றேனென்பதிற் பயன் யாது! அதனால் உனக்கு நீடித்த துன்பஞ் செய்தேனானேன்" என்றான். இளையவன், தமயனுக்குச்செய்யும் பணிவிடை தனக்கு இன்பமாயிருக்க, அதனைத் துன்பமென்றதற்காகவருந்தி "உன் துன்பத்துக்கு அடிப்பட்டகாரணம் நீ தசரதற்கு மூத்தமகனாகப்

பிறந்தது" என்று கூறித் தமயனது தற்காலதசைக்கு வருந்த, இராமன், அவன் வருத்தத்தைத் தவிர்த்தற்குப் பொருத்தமான போத மொழி புகல்வானாய் "இருக்கும்பொருளை யிழப்பதுபற்றிப் பயந்து சோகித்தலும், இருந்தபொருளையிழந்தது குறித்துத் * துயர்ந்து சோகித்தலும் செல்வர்க்குண்டு. துக்க பய சோக காரணமான சொத்தில்லாத வறியார்க்கு, அவ் விருவகைத்துன்பமும் இல்லாமையாகிய எல்லையில்லாத இன்பத்துடன், வறுமைவழியாக மறுமையின்பம் வாய்ப்பதையும் சேர்த்துச் சிந்திப்பாயாக," † என்றுகூறித் தேறுமாறுசெய்தான். செய்த பின்பு, தேவியும் தம்பியும் சிசுருடைசெய்யச் செய்யதவம் செய்து ‡ வைகினன்.

இனி, வசிட்டன் ஆணைப்படிசென்ற தூதர் கேகயம் அடைந்ததும் மேல் நடந்ததும் விளம்பப்படும்.]

சித்திரகூடப்படலம் முற்றிற்று.

---

## பள்ளி அடைப் படலம்.

தைலமாட்டுப்படலத்திற் கூறியவாறு, தைலத்திலிடப்பட்டிருந்த தசரதன்சரீரத்தை ஈமப்பள்ளியில் அடைவித்ததைக் கூறுவது. (ஈமம்-விறகு. "ஈமம் ஏறு இயல்புடையவர்—உடன்கட்டையேறுந மகளிர்" பெருங்கதை. பள்ளி—இடம். "பளிக்கறைப்பள்ளி-பளிங்கறையிடம்" மணிமேகலை. இப்படலம் ௬௰-ம் பாட்டில் "தீக்கலம் (ஈமப்பள்ளி) திருத்திச் செல்வனை வெய்தினேற்றினர்" எனவருதல் காண்க. 'அடை' அடைவித்தலென்று பிறவினைப்பொருள்படப் பிரயோகிக்கப்பட்டிருக்கும் முதனிலைத்தொழிற்பெயர். "பரதன் அரண்மனையை அடைந்து நடந்த செய்தியை யுணர்த்தலின்" இப் படலத்துக்கு இப் பெயரிடப் பட்டதென்றனர் ஒருரைகாரர்.)

---

* துயர்தல்—துன்புறுதல்.

† இங்கே 'ஒட்டகம் ஊசித்துவாரத்தூடுபோகுதல் கூடுமாயினும், செல்வர் சுவர்க்கவாசலுள்ளே செல்லார்' என்ற ஏசுநாதர் ஞானபோதம் ஞாபகத்துக்கு வருகின்றது. ‡ வைகினன் - வசித்தான்,

[வசிட்டன் ஆணைப்படி சென்ற தூதுவர் பரதனிடத்துத் திருமுகங்கொடுக்க, அவன் படித்துப்பார்த்து, இராமனைக்காணும் பேரவாபிடர்பிடித்*துந்த †நாளுங் ‡கோளும் நல் $நிமித்தமும்பாராமல், விரைவாகச் சத்துருக்கனோடு புறப்பட்டுச் சேனைசூழ, வாத்தியங்களின் ஒலி மறையவர் வாழ்த்தொலியில் மறைய, அயோத்தியைநோக்கிச் சென்றான். அவனும் அவனுடன் சென்றவர்களெல்லாரும், தாம் நீங்கியிருந்த அயோத்தியை விரைவில் அடையும் விருப்பினாய்த் தேவலோகத்தினின்று பூமிக்குவந்த தேவர் திரும்ப விரைந்து தேவலோகஞ்செல்வார் போல, வேகமாகப் போனார்கள். காடுகளும் மலைகளும் கடந்து கோசல நாட்டைச் சேர்ந்தார்கள். அங்கே பழங்களும் மலர்களும் பறிப்பாரின்றி மண்மிசை உதிர்ந்து §வாளா கிடக்கும் சோலைகளையும் முதிர்ந்த நெற்கதிர் அரிவாரின்றிச் சாய்ந்து முளைத்த வயல்களையும் பரதன் பார்த்தான்.]

314. அலர்ந்த பைங்கூழ், அகன்குளக் கீழன
மலர்ந்த வாயில் புனல்வழங் காமையால்,
உலர்ந்த வன்கண் உலோபர் கடைத்தலைப்
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே.

இ-ள். இரக்கமற்ற உலோபிகள் (வீட்டுத்) தலைவாசலில் (அவ்வீட்டுள்ளே பொருள் நிறையவிருந்தும் அவ் வுலோபிகளால் ஒன்றும் உதவப்பெறாமையால்) வாடிநிற்கும் யாசகர்போல, நெற்பயிர்கள், (நீர் நிரம்பின) குளத்தின் (மடை) அடியி லுள்ளனவாய் (அமைந்திருந்தும், நீர் பாய்தற்குத்) திறந்திருக்கின்ற (வரப்பு மடை) வாயில் (நீர் பாய்ச்சுவார் பாய்ச்சாததனால்) நீர் செல்லப் பெறாமையால், வாடியிருந்தன.

அலர்ந்த—விரிந்த. பை—பசுமை. கூழ்—பயிர். அலர்ந்த பைங்கூழ்—(வயல் முழுதும் நிறைந்து) பரந்த பசுமையான (நெற்) பயிர். அகன் குளம்—அகன்ற குளம். கீழன - (குளத்தின் மடை) அடியிலுள்ளன. மலர்ந்த — விரிந்த — திறந்த. மலர்ந்தவாய்—(உண்ணுதற்குத் திறந்த வாய்போல, நீரைஉட்கொள்ளத்) திறந்த (வரப்பு மடை) வாய். புனல்—நீர்.

---

*உந்த—தள்ள. †நாள்—நக்ஷத்திரம். ‡கோள்—கிரகம். $நிமித்தம்—சகுனம். §வாளா—வீணாக.

வழங்கல்—செல்லல் (மணிமேகலை). வழங்கலுக்குக் கொடுத்தலென்ற பொருள்கொண்டு, 'புனல்வழங்காமையால்' என்பதற்கு (நீர் பாய்ச்சுவோர் பாய்ச்சி நீர் கொடாமையாலென்றும் பொருள்செய்யலாம். உலர்ந்த—வாடின. வன்கண்-இரக்கமின்மை. கடைத்தலை—தலைவாயில்: புலர்தல்—வாடுதல். பரிசிலர்—இரப்போர்.

குளம் உலோபர்வீட்டுக்கும், குளத்தில் நிறைந்த நீர் அவ்வீட்டுள் நிரம்பிய செல்வத்துக்கும், உலோபர் நீர் பாய்ச்சிகளுக்கும், உலோபாது இரக்கமின்மை (தசரதன் இறந்ததனாலும் இராமன் வனம் சென்றதனாலும் ஏற்பட்ட) நீர்பாய்ச்சிகளினது சிரத்தையின்மைக்கும், குளத்தின் (மடை) அடியில்நிற்கும் நெற்பயிர் உலோபர்வீட்டுத் தலைவாசலில் நிற்கும் யாசகர்க்கும், பயிர்கள் நீர் பெறுதற்குத் திறந்திருக்கிற வரப்பு மடைவாய் யாசகர் பொருள் பெறுதற்கு விரித்திருக்கிற கைக்கும், நீர் வழங்காமை பொருள்வழங்காமைக்கும் உவமை: வாடிநிற்றல் பயிர்க்கும் யாசகர்க்கும் பொது.

[சுருங்கச்சொன்னால், கோசலநாடு உயிர்நீங்கிய உடலை ஒத்திருந்தது. அதனை நோக்கின பரதன், துன்புற்றுத் திகைத்துநின்று, அந்நிலைமைக்குக் காரணம் யாதென்றுதெரியானாய்ச் சத்துருக்கனைநோக்கி "பார் இனிக் கேட்டுத் தெரிவதாகவுள்ள தீது யாதோ நேர்ந்திருக்கின்றது" என்று கூறி நெடுமூச்சுவிட்டான். பின்பு, அயோத்திநகரை அணுகி அதனை நோக்கினான்]

315. "அண்ட முற்றும் திரிந்தயர்ந் தாய், அமு
துண்டு போதி" என் றெண்கதிர்ச் செல்வனை
விண்தொ டர்ந்து விலக்குவ போன்றன,
கண்டி லன், கொடி யின்நெடுங் கானமே.

இ-ள். "(சூரியனே!) அண்ட (கோள) முழுதிலும் சஞ்சரித்துத் தளர்ந்துவிட்டாய், (இந் நகரிலே தங்கி) அமுதுண்டு (தளர்வு தீர்த்துக் கொண்டு) போவாயாக" என்று, சூரியனை (அவன் செல்லும் விண்ணிற் போய்)த் தொடர்ந்து (அவன் இளைப்பாராதுபோதலை) விலக்குவனபோல் (அசை) வன (வாய் எப்போதும் உயர்த்தப்பட்டுள்ளன) வான கொடிகளின் பெருங்கூட்டத்தை (அயோத்தியிலே பரதன்) கண்டானில்லை.

அமுது உண்டு—சோறு புசித்து; நீர்குடித்து. கொடியின் நெடும் கானம்—கொடிகளின் பெருங்கூட்டம்; காடு என்னும் பொருளுடைய 'கானம்' மிகுதியை உணர்த்தியது.

[பரதன், 'பொருள்கள்வேண்டுவோர் வாங்கிக்கொண்டு போங்கள்' என்று எப்போதும் இரவலரை அழைக்க முழக்கும் கொடைமுரசொலித் தலைக் கேட்டானில்லை சங்கீத வித்வான்களும் சாகித்தியவித்துவான் களும் யானை குதிரை முதலிய பரிசுகளைப் பெற்று வரிசைவரிசையாகச் செல்வதைக் கண்டிலன். பசுக்கள் முதலிய பலதானங்கள் வாங்கிப் பலபல பகுதிகளாகப் பார்ப்பார் போவதையும் பார்த்தானில்லை. நீரில் லாத ஆறுகள்போலத் தெருக்கள் சனமில்லாதிருக்கக் கண்டான். "இளை யவ! இது தசரதசக்ரவர்த்தியின்நகர்தானோ! இந்நகர் எல்லாச் செல் வங்களோடும் சீதேவிநீங்கிய திருப்பாற்கடல்போ லிருப்பானேன்?" என்றான். பின்பு தசரதனது அரண்மனையை அடைந்து, அவனிருக்கு மிடமெல்லாந்தேடிக் காணாய்த் திகைத்துக்கொண்டிருக்கும்போது ஒரு தாதிவந்து "அன்னை உங்களை அழைத்துவரச்சொன்னாள்; வாருங் கள்" எனச் சென்று, கைகேயியைக் கண்டு வணங்கினார்கள். அவள் "தாய்தந்தையரும் தங்கையரும் சேமமோ" எனப் பரதன் ஆமென்றான். அதன்பின், "சக்கரவர்த்தியைக் கண்டு தாள்தொழ விரும்புகின்றேன். எங்கிருக்கின்றான்?" என்றான். அவள் அவன் "விண்ணுற்றான்" என்று வெட்டினாற்போலச் செப்பினாள். அந்த வார்த்தை அவன் காதில் விழுந்த தும், இடிவிழுந்தமரம்விழுந்தாற்போலக் கீழேவிழுந்து உணர்வும் உயிர்ப்பும் ஒழிந்து கிடந்தான். பின்பு, பிரக்கினை வரப்பெற்று, அருவி பொழியும்கண்ணனாய்ச் "செவியிலே தீயை வைத்தாற்போலத் தீய சொல்லை, நீ ஒருத்திதவிர, எவராயினும் இவ்வாறு வருந்தாதுசொல்லு தற்கு எண்ணவுமாட்டார்களே" என்று சீறிக் கூறி எழுந்து, ஏங்கி இரங்கித் திரும்பவும் விழுந்து, விம்மி வெய்துயிர்த்து, அலறி அழுது "ஐயா! நீ யிறக்கலாமோ! அது அறத்தையும் அருளையும் அழித்த தன்றோ! யாரைப் பிரிந்தாலும் பிரியாத இராமனை யெவ்வாறு பிரிந் தாய்! இந்த உலகில் இரவலரை இனிய நண்பினராக இனிதேற்று அவ ரெல்லாருக்கும் இட்டபூர்த்திசெய்து உவந்திருந்தாய். அந்த உலகில் இரவலர் இல்லையே. அங்கேன்சென்றாய்! உனது குளிர்ந்த குடைநிழற் கீழ் இருந்தாரெல்லாரும் வருந்தாநிற்க, அவர்களை நீ கைவிட்டுக் கற்பக

நிழலைக் காதலிக்கலாமோ!" என்று இவ்வாறு பலவாறு புலம்பினன். பின்பு கைகேயியை நோக்கி "என் தமயனும் தலைவனும் தந்தையும் தாயும் ஒருவனான இராமனைத் தொழுதாலன்றி என் துன்பம் ஒழியாது" என்றான்.

அப்போது, அவள் "சீதை இலக்குமணனுடன் இராமன் வனத்தில் இருக்கின்றான்" என்றாள். அதுகேட்டு, அவன், நெருப்புண்டவன்போல வருத்தமடைந்து, "இன்னமும் துன்பச்செய்திகள் எத்தனை கேட்க இருக்கின்றனவோ" என்று ஏங்கிப் பொருமி "வனம் போன காரணம் யாது?" என, "மன்னவன் வாக்கினால் வழங்கியிருந்த வரங்களிரண்டில் ஒன்றால் இராமனைக் காட்டிற்போக்கினேன்; மற்றொன்றால் உன்னை மன்னவனாக்கினேன்" என்றாள். எனவே, அத்தீய சொற்கள் செவியுறாமல் தடுக்கக் கைகள் காதுகளை மூடின; கடுஞ்சினம் மூண்டது; புருவங்கள் குனித்தன; கண்கள் கோபத்தீயையும் மூக்குப் பெருமூச்சுக்காற்றையும் வீசின; கன்னம் துடித்தது; வாய் மடித்தது; மண் பிளக்குமாறு கைகள் அடித்தன.]

316. கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி,
கடியவள் தாயெனக் கருது கின்றிலன்;
நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்;
இடி உரும் அனையவெம் மொழிஇ யம்புவான்.

இ-ள். கொடிய கடிய கோபத்தாற் கொதிப்புண்ட சிங்கம்போன்ற பரதன், (கைகேயி) கடியவள்(ஆயினும்) தாயாயிருக்கின்றாளென்று (சற்றேனுந் தாட்சணியத்துடன்) கருதானாப் (அவளைக் கொல்ல உன்னிக் கொன்றுவிட்டால்,) இராமன், கோபிப்பானேயென்று, (கொல்லுதற்கு) அஞ்சி (க் கொல்லாமல் தடைப்பட்டு) நின்று (அவளை நோக்கி) இடியை ஒத்த கடிய சொற்கள் கூறுவானானான்.

கோளரி - சிங்கம்: கோள் (- வலி). அரி ( - சிங்கம்) எனப்பிரித்து வலியுடைய சிங்கமென்றும் பொருள்செய்யலாம். முனிதல் - சினத்தல்; வெறுத்தல். உரும் - இடி. இடி உரும் - இடிக்கின்ற இடி.

பரதனது ராமபத்தியே அவன் தாயைக் கொல்ல நினைத்தற்கும் கொல்லாது தடைப்படுதற்கும் காரணமாயிருந்தது கவனிக்கத்தக்கது.

இராமன் திறத்தில் அவனுக்கிருந்த ஆழ்ந்த அன்பின் அளவு இங்கே இனிதாகத் திருட்டாந்த முகத்தால் தெளிவிக்கப்பட்டிருத்தல் சிந்தனை செய்யத்தக்கது.

317. "மாண்டனன் எந்தை,என் தம்முன் மாதவம்
பூண்டனன், நின்கொடும் புணர்ப்பி னால் என்றால்,
கீண்டிலன் வாய்,அது கேட்டு நின்றயான்
ஆண்டன னேயன்றோ, அரசை, ஆசையால்!"

இ-ள். (பரதன், கைகேயியை நோக்கி) "உன் கொடிய சூழ்ச்சியால் என்தந்தை இறந்துபட்டான், என்தமையன் தவசியானான் என்று கூறினாய்) என்றால், (அதைக் கூறிய உன்) வாயைக்கிழியேனாய் அதைக் கேட்டு (ச் சும்மா) நின்ற யான் ஆசையோடு அரசை ஆண்டேனேயானேனன்றோ!" (என்றான்).

எந்தை - என் தந்தை. தம்முன்-தமையன். புணர்ப்பு - சூழ்ச்சி. கீளுதல் - கிழித்தல்.

[பரதன், கைகேயியை நோக்கி "நீ உண்மையில் தாயாயில்லை, பெயர்மாத்திரையே தாயாயிருக்கிறாய்; ஆதலால், உன்னைக் கொல்லத் தடையில்லாத யான் உன்னைக் கொன்றுவிடாததனால் நீ உயிரோடிருக்கின்றாய். உன்னைக்கொல்லவில்லையாயினும் என்னையேனும் கொல்லாமல் யானும் உயிரோடிருக்கின்றேன், இருவரும் கொலையுண்ணாதுயிரோடிருத்தற்குக் காரணம் இரு கொலைகளையும் இராமன் வெறுப்பானென்பதே" என்றான்]

318 "நோயி ரல்லீர் நும்கண வன்தன் உயிர்உண்டீர்!
பேயி ரே!நீர் இன்னும் இருக்கப் பெறுவீரே!
மாயிர்! மாயா வன்பழி தந்தீர்! முலைதந்தீர்!
தாயி ரே!நீர் இன்னும் எனக்கென் தருவீரே!"

இ-ள். "நீர் (பெண்ணேயன்றி) நோயல்லீர் ஆயினும், உயிருண்ணும் நோய்போல, நீர்) உமது கணவனுடைய உயிரை உண்டீர்! (நோயேயன்றிப் பேயும் உயிருண்ணும். அது செய்த நீர்) பேயே ஆனீர்! (இப்படிப்பட்ட கொடுமையுடைய நீர் இதுவரைசெய்த கொடுமைபோதாதென்று) இன்னம் (அதிகக் கொடுமைசெய்தற்கு நீண்ட ஆயுளோடு கூடி) இருக்கப்பெறுவீர்! இற (வாது வாழ்) வீர்! (என்றும்) இறவாத

(நிலையான) வன்பழியை (எனக்குத்) தந்தீர்! (பகைவரும் தாலாகாத பழியைத் தந்த நீரே என்னையீன்று எனக்குப்) பால் தந்தீர் ! (ஆதலால் நீர் வன்பழிதந்தவராயினும்) தா (யெனற்குரி) யீரே (ஆக உள்ளீர்)! இன்னும் எனக்கு என்ன (கேடு) தரவிருக்கின்றீர் !" (என்றான் பரதன்).

மாயாவன்பழி, தசரதனிறந்ததையும் இராமன் வனஞ்சென்றதையும் பற்றியது. 'நோயீரல்லீர்' என்பதற்கு "விசனமுடையவராகக் காணப்படவில்லை" என்று உரை உளது.

319. "இறந்தான் தந்தை, ஈந்த வரத்துக் கிழிவென்னு;
அறந்தான் ஈதென் றன்னவன் மைந்தன் அரசெல்லாம்
துறந்தான்; தாயின் சூழ்ச்சியின், ஞாலம், அவனோடும்
பிறந்தான் ஆண்டான் என்னுமி தென்னூற் பெறலாமே."

இ - ள். "கைகேயியின் வஞ்சனையால் (மயங்கித் தான்) கொடுத்த வரத்துக்கு (விரோதமாக அந்த வரப்படி செய்யாமை) இழிவென்று கருதி, (அவ்வரப்படி இராமனைக் காட்டுக்கனுப்ப ஒப்புக்கொண்டு, அது பொறுக்கமாட்டானாய்த்) தசரதன் இறந்தான்; (அரசன் ஆணைப்படி செய்யும்) இது தருமமென்று இராமன் அரசுமுழுதும் துறந்தான்; தாயின் வஞ்சனையாற் (கிடைத்த)பூமியைப் பரதன் ஆள்வானானென்னும் இந்தப்பழி(யான் அடையமாட்டேன். இப்பழி)என்னால் அடையலாகாதது" (என்றான் பரதன்).

'ஈது,' அரசனாணைப்படி அரசுதுறத்தலைக் குறித்தது. 'இது,' முன்பின்தொடர்ச்சியால் இப்பழி யென்று பொருள்படநின்றது. ஏகாரம் எதிர்மறை

இப்படிப்பட்ட, அறமுறைதிறம்பாத,தருமமூர்த்திகளான தந்தை தமையனையுடைய எனக்கும் இவ் இழிபழிக்கும் எவ்வளவு தூரம்! என்பான் 'இதென்னூற் பெறலாமே!' என்றான். பரதன், தசரத ராமர்களைத் 'தசரதன்' 'இராமன்' என்னாமல் 'தந்தை' 'அன்னவன்! மைந்தன்' என்றதும், தன்னைப் 'பரதன்' அல்லது 'யான்' என்னாமல் 'அவனோடும் பிறந்தான்' என்றதும் இதனை வலியுறுத்தும்.

(தொடரும்.)

வெ ப சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

# கொண்கானத்து நன்னன்.

'கொண்கான நன்னனன்னாட்டு' என்று நற்றிணை 391-ம் செய்யுளிற் கூறியிருப்பதால் இவன்நாடு கொண்கானமாகும்.

'நன்னனன்னாட் டேழிற்குன்றம்பெறினும்' (ந. 391) 'நன்னனன்னாட் டேழிற்குன்றத்து' (அகம். 349) 'நன்னனேழினெடுவரை (அ.152) எனவருவதால் ஏழிற்குன்றம் இவனுக் குரியதாகும். (ஏழிற்குன்றம் கண்ணனூருக்குவடக்கே பதினாறுமைல்தூரத்தி லுள்ளது).

'நன்னனேழினெடுவரைப் பாழிச்சிலம்பில்' (அ-152) என வருவதால் ஏழிலைச்சேர்ந்த பாழிச்சிலம்பு இவனுக்குரியதாகும்.

'சுடர்ப்பூணன்னன் பாழியன்ன கடியுடைவியனகர்' (அ.15)'நன்னனுதிய னருங்கடிப் பாழி' (அ-258) 'பொலம்பூ ணன்னன் புனனாடு கடிந்தென, யாழிசை மறுகிற் பாழியாங்கண்' (அ-396) என்பவற்றாற் பாழிச்சிலம்பையடுத்த பாழிநகரமு மிவனுக்குரியதென்றறியலாம்.

'நன்னன்பறம்பிற், சிறுகாரோடன்பயினொடுசேர்த்திய, கற்போனுவினேனாகி' (அ-356) என்று கூறியிருப்பதாற் பறம்பு (மலையும்?) இவனுக்குரியது.

'பாரத்துத்தலைவ னாரநன்னன்' (அ-152) என்பதாற் பாரம் என்னும் ஊரும் இவனுக்குரியதாகும் என் றறியலாம்.

'குடாஅ, திரும்பொன்வாகைப்பெருந்துறைச் செருவிற், பொலம்பூணன்னன்பொருதுகளத்தொழிப' (அ-199) என்றிருப்பதால் வாகைப் பெருந்துறையும் இவனுடைய ஊராகும்.

[பதிற்றுப்பத்து-IV-ல் (கடம்பின்) பெருவாயில் இவனுக்குரியதென்றுசொல்லியிருக்கிறது. அதன்பதிகக்காரர் பூழிநாடு இவனுக்குரியதென்பர்]

'நன்னனுதியன்' (அ.258) எனப்படுதலால் இவன் சேரனைச் சேர்ந்தவனென்றுதோன்றுகிறது.

'நன்னன், விண்பொருநெடுவரைக்கவா அற், பொன்படுமேருங்கின்மலை யிறந்தோரே' (அ-173) 'பொன்படுகொண்கானநன்னாட், டேழிற்குன்றம் பெறினும்' (ந. 391) என்பவற்றால், இவனுடைய ஏழிற்குன்றப் பிரதேசத்தில் அக்காலத்திற் பொன் மிகுதியாய்த் தோண்டியெடுக்கப் பட்டது என் றறியலாம்.

'நன்ன னுதிய னருங்கடிப் பாழித்
தொன்முது வேளி ரோம்பினர் வைத்த பொன்' (அ-258)

'அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை
யணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
வருங்கல வெறுக்கையின்' (அ-372)

என்பவற்றாற் பாழியில், தொன்முதுவேளிராகிய இவனுடைய முன் னோர்களாற் சேர்க்கப்பட்டுச் சேமித்துவைக்கப்பட்டிருந்த பொன் ஓர் தெய்வத்தாலும் மனிதர்களாலும் காவல்செய்யப்பட்டுவந்தது என்று தெரிகிறது. பொன் இந்நாட்டுச் சுரங்கங்களி லுண்டானதாயிருக்கலாம். (அருங்கல வெறுக்கை என்பது கொள்ளைப்பொருளாயினுமாம். அருங் கலங்களாகச் செய்யப்பட்ட மேற்சொன்ன பொன்னாயினுமாம்.)

'பொலம்பூணன்னன்' 'பொலந்தேர்நன்னன்' 'ஆரநன்னன்' 'பொன் னங்கண்ணிப்பொலந்தார்நன்னன்' என்பவற்றிலிருந்து மேற்சொல்லிய காரணத்தால் இவனிடம் பொன் மிகுதியாயிருந்ததென் றறியலாம்,

'..........................ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
வினமழை தவழு மேழிற் குன்றம்' (அ-345)

என்னும் செய்யுளால், இவனது ஏழிற்குன்றத்தைப்பாடிய ஒரு பெரும் புலவன், கொற்றவையாகிய வனதுர்க்கையின் அருளால், வெளியகால்களை யுடைய பலகுதிரைகளைச் சம்மானமாகப்பெற்றானென்று தெரிகிறது.

இச்செய்யுளாலும் மேற்காட்டிய அகநானூற்று 372-ம் செய்யுளில் 'அருந்தெறன்மரபிற் கடவுள்காப்ப' என்பதாலும் இவனுடைய ஏழிற் பாழியிற் றெய்வம் கோயில்கொண்டெழுந்தருளியிருந்ததென் றறியலாம்.

'......................இசைநல்லீகைக்
களிறுவீசு வண்மகிழ்ப் பாரத்துத்தலைவ
ஞாநன்னன்' (அ-152)

என்பதால் இவன் மிக்க கொடையாளியென் றறியலாம்.

" உலைந்த வொக்கல் பாடினர் செலினே
யுரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
வருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கு நன்னன் " (அ-349)

என்பதாற் பாணர்முதலியோர்க்குத் தன்பகைவரிடமிருந்து கவர்ந்த அருங்கலமுதலியவற்றைக் கொடுத்தோனென்று தெரிகிறது.

' விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்த ரோட்டிய வேந்துவே னன்னன்
கூந்தன் முரற்சியிற் கொடிதே ' (ந-270)

' சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்
உறுபகை தரூஉம் மொய்ம்மூசு பிண்டன்
உண்மூர ணுடையக் கடந்த வென்வேல்
.....................................
பாரத்துத் தலைவ ஞா நன்னன் ' (அ-152)

இப்பாணர்பாடல்களிலிருந்து இவனுடைய வீரம் வெளியாகும். மிக்க வீரமுடையவர்களாகிய தித்தன், வெளியன், பிண்டன் முதலியவர்களை வென்றவன் இவன்.

"ஞெமன்ன், றெரிகோ லன்ன செயிர்தீர் செம்மொழி நன்னன்" (அ-349) என்பதால் இவனுடைய சத்தியவாக்கும் நியாயத்தீர்ப்புத்திறமும் விளங்கும்.

' பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவி னார்ப்பெழுந் தாங்கு '

என்பதால் நன்னன் பிறந்தநாட்கொண்டாட்டம் மிக்க ஆரவாரத்துடன் நடத்தப்பட்டதெனத் தெரிகிறது (மதுரைக்காஞ்சி 618-19). இதிற் குறித்த நன்னன் சோண்கானத்தானோ வேறுநாட்டானோ நிச்சயமாய்த் தெரியவில்லை.

இவன்சம்பந்தப்பட்ட விருத்தாந்தமொன்று, அகநானூற்றிற் பின்வருமாறு காணப்படுகிறது. 'வீளையம்பின்வில்லோர்பெருமகன், பூந்தோள்யாப்பின்மிஞிலிகாக்கும், பாரத்தன்ன' (நற்-265) என்றபடி நன்னனது பாரம் என்னுமூரைத் தனது பராக்கிரமத்தாற் காத்துவந்த (சேனைபதியாகிய) மிஞிலியென்பவன், பாழியென்னுமிடத்தில், 'பிரம்பு'என்னுமூருக்குத்தலைவனாகிய 'ஆய்-எயினன்'* என்பவனைக் கொன்றானாக, (அ-148-396) பகலிற்புறப்படாத கூகைமாத்திரம் நாணி வருந்தி உள்ளிருப்ப (அ.148) மற்றப்பறவைகளெல்லாம் எயினனுடைய இறந்தவுடலை வெயில்படாமற் சிறகுகளால்மறைத்துச் சத்தம்போட்டுக் கூட்டம்போட்டன (அ-181, 208). அதைக் களஞ்சென்றுபார்க்கச்சகியாதநன்னன் சினமிகுந்து, இறந்த எயினனுடலைக் கொடாமல் ஒளித்துவைக்க, எயினன்மனைவியர் அதற்குவருந்த, அந்தவருத்தத்தை 'அகுதை' என்னும் வீரன் மாற்றினான் (அ-208). இவற்றிற்கு அகத்தினின்று மேற்கோட்செய்யுட்கள் வருமாறு:—

" கறையடி யானை நன்னன் பாழி
ஊட்டரு மரபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை யதிகற் கொன்றுவந்
தொள்வா ளமலை யாடிய ஞாட்பின் " (142)

" கடும்பரிக் குதிரை யாஅ யெயின
னெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங் கிடும்பை
பெரிதா லம்ம விவட்கே " (148)

---

* 'வண்கை யெயினன் வாகை யன்ன' (பு-351) என்று கூறப்பட்ட வாகைக்குரிய எயினன் இவனோ? வேறோ?

" ............................ஒன்னு
ரோம்பாண் கடந்த வீங்குபெருந் தானை
யடுபோர் மிஞிலி செருவிற் குடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப
வண்மை யெயினன் வீழ்ந்தென ஞாயிற்
றெண்கதி ருருப்பம் புதையவோ ராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்" (181)

" அண்ணல் யானை யீயும் வண்மகிழ்
வெளியன் வேண்மா னுஅ யெயின
னளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
யிழையணி யானை யியறேர் மிஞிலியொடு
நண்பக லுற்ற செருவிற் புண்கூர்ந்
தொள்வாண் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்
கங்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்
றெண்கதிர் தெறுமைச் சிறகரிற் கோலி
நிழல்செய் துழறல் காணேன் யானெனப்
படுகளங் காண்டல் செல்லான் சினஞ்சிறந்
துருவினை நன்ன னருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குரூஉப் பைந்தா ரருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
யகுதை களைதந் தாங்கு" (208)

" பொலம்பூ ணன்னன் புனனுடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற வாஅ யெயினன்
இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர்கொடுத்தன்ன" (396)

என்பவற்றுள், 142-ம் பாட்டிலிருந்து பயங்கரமான பேய்வடிவத்தையுடைய கவசத்தையணிந்துகொண்டுசென்ற மிஞிலியென்பவனாற் கொல்லப்பட்டவன் அதிகன் என்று தெரிகிறது. ஆதலால் "அதிக

னும் எயினனும் கொல்லப்பட்டார்களென்றும் அதிகன் என்பது எயின னென்றிருக்கவேண்டு"மென்றும் அகநானூற்றுப் பதிப்பாசிரியர் இருவித மாய்க் கருதினர்.

எயினன்விருத்தாந்தத்திலுள்ள விசேஷசம்பவம், புட்கள் பிரீதி யால் அவனிறந்தவுடலை வெயில்படாமற் பந்தரிட்டுமறைத்தன என்பது. அக்கருத்தையுடைய 'புள்ளிற்கேமமாகிய' என்பது இங்கு அதிகனுக் கும் அடைமொழியாகக்கொடுக்கப்பட்டிருப்பதால் அவ்வெயினனும் அதிகனும் ஒருவரர்யேயிருக்கலாமென்று நினைக்கவு மிடமுண்டு.

மேற்காட்டிய 208-ஆவது செய்யுள் 5-ஆவது வரியிலுள்ள 'வெளியன்வேண்மா னுஅயெயினன்' என்பதுமுழுவதும் எயினனையே குறித்ததாகவும், 'பல்வேண்மகளிர்' (15-வதுவரி) என்பது அவனுடைய பலமனைவியரைக்குறித்ததாகவும் கொள்க.

நன்னன் தீயகுணங்களைக்குறிக்கும் இரண்டு ஐதீகங்கள் அகநானூ றல்லாதவேறு தொகைநூல்களிற் காணப்படுகின்றன. அவை வருமாறு:-

1. நன்னன், தன்னுடைய சோலையிலிருந்து விழுந்து ஆற்றில் மிதந்துவந்த ஒருகாயை யெடுத்துத்தின்ற ஒருபெண்ணை, அவள் நிறை யுள்ள பொற்பாவையையும் எண்பத்தொருயானைகளையும் அவளைக் கொல்லாது விட்டுவிட்டாற் றருகிறேனென்று அவள்தகப்பன்சொல்லியுங் கேளாமல், கொலைபுரிந்தானென்றும் அவனுக்கு நரகமே கதியென்றும் பரணர்கூறுகிறார்.

'மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றென்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ வன்னை' (கு.292)

இதிற் 'புனறருபசுங்காய்' என்றது 'நன்னனறுமாகொன்று நாட்டிற் போக்கிய' (கு-73) என்றதிலுள்ள நறுமாவாகிய மாங்கா யென்று சொல்வாரு முண்டு.

முன்சொன்னபடி நற்றிணை 270-லும் அகம் 152 முதலியவற்றிலும் பரணராற்புகழப்பட்ட நன்னன்தான் நரகத்துக்குரியவனென்று குறுந்தொகையிற் பரணராற்சிறுமையாகப் பேசப்பட்டவன் என்பது சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. குறுந்தொகைநன்னனை வேறாகக் கொண்டு பின்வருமாறு சமாதானம் செய்துகொள்ளவேண்டும். அகநானூற்றுக்கு ஆக்கியோன்பெயர்க்குறிப்பு எழுதப்பட்டபின்னர்க் குறுந்தொகைக்கு அப்படிப்பட்ட குறிப்புச்சேர்த்தவர் முன்னதிலுள்ள நன்னன்பாடல்களுக்குப் பரணர்சம்பந்தமிருப்பதுகண்டு பின்னதிலுள்ள நன்னன்பாடல்களுக்கும் பரணர்சம்பந்த மேற்படுத்தினர்போலும்? அகநானூற்றில் வேறோரிடத்தில் நன்னன் 'ஞெமன்ன் றேரிகோலன்ன செயிர்தீர் செம்மொழி' (அ-349) யுடையனென்று கூறப்பட்டுள்ளான். இப்படிப்பட்டவன் மேற்கண்டசெய்கைசெய்திருக்கமாட்டான்.

2. நன்னன் ஒருபுலவர்க்குப் பரிசில்கொடாமற் றன்வாயிற்கதவை யடைத்தான். இவன்வழியிற்றோன்றிய இளவச்சிரக்கோ என்பவனும் வேறொருவமிசத்திற்றோன்றிய இளங்கண்டீரக்கோவென்பவனும் பெருந்தலைச்சாத்தனர் என்னும் புலவரை யொருகாலத்திற் சந்தித்தபோது, சாத்தனர் பின்னவனைமாத்திரம் தழுவி முன்னவனைத் தழுவுதல்செய்திலராக அதனால் மனவருத்தமடைந்த இளவச்சிரக்கோ, தன்னைத்தழுவாமைக்குக்காரண மென்னவென்று புலவரைக் கேட்டான். அதற்கு அவர் 'நீ நல்லவன்தான்; உன்முன்னோனாகியநன்னன் என்பவன் என்னைப்போன்ற புலவர்க்குப் பரிசில்கொடாமற் கதவையடைத்ததனால் அதுமுதல் நுமதுவரை, புலவராற் பாடப்படுதலொழிந்தது. ஆண் பிள்ளைகள் வீட்டிலில்லாதகாலத்தும், கண்டீரக்கோவீட்டுப்பெண்டுகள் கூடப், பொன்னலங்காரமணிந்த யானைமுதலிய பெரும்பரிசில்களைப் புலவர்க்குக்கொடுப்பார்கள்' என விடையிறுத்தார்.

இதிற்குறித்த நன்னன் நம்முடையநன்னனாயிருக்கமாட்டான். ஏனென்றால் நம் நன்னன் அகத்தில் 'இசைநல்லீகைக், களிறுவீசுவண் மகிழ்ப் பாரத்துத்தலைவனாரநன்னன்' (152) என்றும் "உலைந்தவொக்கல் பாடினர்செலினே—பெருங்கலவெறுக்கை, துன்னருந் கூரத்து நன்னன்" (349) என்றும் கொடைக்குச்சிறந்தவனாகக் கூறப்பட்டிருக்கிறான்.

இப் பிரதிய ஐதிகத்திற்குச் செய்யுள் வருமாறு:—

'பண்டும் பண்டும் பாடுந ருவப்ப
விண்டோய் சிமய விறல்வரைக் கவாஅற்
கிழவன் சேட்புலம் படரி னிழையணிந்து
புன்றலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிருந் தம்பதங் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோ னாகலி னன்று
முயங்க லான்றிசின் யானே, பொலந்தேர்
நன்னன் மருக னன்றியு நீயு
முயங்கற் கொத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவி னாடுமழை
யணங்குசா லடுக்கம் பொழியு நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தன ரெமரே' (புறம்-151)

நன்னனுடைய தோல்வியும் மரணமும்பற்றிய விஷயங்கள் பின்வருமாறு:-

'........................நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே' (கு-73)

என்பதிலிருந்து கோசர் என்பார் நன்னனுடைய நறுமாவைக் கொன்று அவனை நாட்டினின்றும் துரத்தினார்கள் என்று தெரிகிறது.

(இச்செய்யுளிலுள்ள 'நறுமா'வென்பது யானையென்பர், 'திருக்கண்ணபுரத்தலத்தான் திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்க'னென்பார். சிலர் குதிரையென்பர். சிலர் 'நறு' என்னும் அடைமொழியைக் கொண்டு 'மா'மரமென்பர். மாமாயிருந்தால், அப்பெண் தின்ற காய் காய்த்த மாமாயிருக்கவேண்டும்.)

அகநானூறு இவ்விஷயத்தைச் சிறிது மாற்றி நன்னனைக் கொஞ்சம் மேன்மையாய்ப் பேசுகிறது.

வினைதவப் பெயர்ந்த வெண்வேல் வேந்தன்
முனைகொ ருனையொடு முன்வந் திருப்பத்
தன்வரம் பாகிய மண்ணெயி லிருக்கை
யாற்று மையிற் பிடித்த வேல்வலித்

தோற்றம் பிழையாத் தொல்புகழ் பெற்ற
விழைதக வோங்கிய கழைதுஞ்சு மருங்கிற்
கானமர் நன்னன் போல (392)

என்பதனால் ஒருவேந்தன் முற்றுகைசெய்ய, ஆற்றாத தன்மதிலை விட்டுப் போந்து காட்டிற் றங்கியிருந்தானென்று தெரிகிறது. பின்வரும் செய்யுளால் 'வாகைப்பெருந்துறை' என்னும் களத்தில், களங்காய்க்கண்ணிநார் முடிச்சேரலால்—தன்நாட்டையபகரித்ததற்காக—இந்நன்னன் கொல்லப்பட்டானென்றுதெரிகிறது.

'..............................சூடா அது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன' (அ-199)

பிந்திய நூலாகிய (?) பதிற்றுப்பத்திலும் அதற்கும்பிந்திய அதன் பதிகத்திலும், இவ்விஷயம் பின்வருமாறு காணப்படுகிறது.

'பொன்னங் கண்ணிப் பொலந்தார் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுத றடிந்த
தார்மிகு மைந்தி னார்முடிச் சேரல்' (பா.40; வரி-14-16)

'பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
யுருள்பூங் கடம்பின் பெருவாயி னன்னனை
நிலைச்செருவினாற் றலையறுத்தவன்
பொன்படு வாகை முழுமுத றடிந்து' (IV பதிகம்)

பதிற்றுப்பத்தில் நன்னன் விஷயமாய்ப் பிரஸ்தாபிக்கப்படுகிற பூழிநாடு, கடம்பின்பெருவாயில், வாகைக்காவன்மாமுதலியவை அகநானூறுமுதலிய மற்றத் தொகைநூல்களிலுள்ள நன்னன்விஷயமான பாடல்களிற் காணப்படவில்லை.

'நன்னனேற்றைநறும்பூணத்தி' (அ-44) என்பதில் நன்னனும் ஏற்றையுமா? அல்லது நன்னனாகிய ஏற்றையா என்பதும் இந்நன்னன் நம்நன்னன்தானா வென்பதும் விளங்கவில்லை,

'நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த வன்பிற் கழறொடி
நறவுமகிழிருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்' (அ-97)

இதிற்குறித்த நன்னன்வேண்மான் நம்நன்னன்தானே அல்லனே!

'அருவி யாம்பல் கலித்த முன்றுறை
நன்ன னுஅய் பிரம்பு' (அ-356)

இதிற்குறிக்கப்பட்ட நன்னன்-ஆய் நம்முடைய நன்னன் அல்லன். ஏனென்றால் இச்செய்யுளிலேயே சிலவரிகளின்முன்பு 'நன்னன்பறம்பு' என்று இவ்வியாசநாயகனான நன்னன் பிரஸ்தாபிக்கப்படுகிறான்.

பின்வரும்பாட்டிலுள்ள 'சொல்பெயர்தேஎத்த' என்னும் சொற்றொடரால் நன்னன்நாட்டில் தமிழல்லாத வேறொருபாஷை பேசப்பட்டு வந்ததென்று தெரிகிறது. (ஆனாலும் நன்னன் தமிழ்ப்பாஷையையும் தமிழ்ப்புலவரையும் கௌரவித்ததனால் தமிழ்ப்புலவர்களால் விசேஷமாகப் பாராட்டப்பட்டிருக்கிறான்).

'உலைந்த வொக்கல் பாடுநர் செலினே
யுரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
வருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கு நன்ன னன்னாட்
டேழிற் குன்றத்துக் கவாஅற் கேழ்கொளத்
திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
யெரிமருள் கவள மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பிற் றோன்றுஞ்
சொல்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே'

(அ-349-மாமூலனார்)

இதே மாமூலனார் திருவேங்கடத்துக்குவடக்கே வேறுபாஷை தம்காலத்தில் வழங்கியதென்றார்.

'பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினு நல்குவர்' (அ-211)

மேற்காட்டிய 15, 152, 258, 396-ம் அகப்பாடல்களிலிருந்து 'பாழி' நன்னனுக்குரியதென்று தெரிந்தோம். 'இளம்பெருஞ்சென்னி' என்னும் சோழன் அந்நகரத்தைப் பாழாக்கி அதிலிருந்த வம்பவடுகரையும் சவட்டினனென்று தெரிவதால், வம்பவடுகர் அவ்வூரில் வாழ்ந்தார்களாகவேண்டும். வம்பவடுகர் அவ்வூரிற் பரம்பரையாய் வாழ்ந்தார்களா? அல்லது அக்காலத்தில் வந்தேறிகளாய்த்தங்கியிருந்தார்களா வென்பதை நிச்சயமாயறியமுடியவில்லை. வடுகேனும் துளுவேனும் அத்தேசபாஷையாயிருந்திருக்கவேண்டும். சங்கத்தார்காலத்திற் கன்னட மேற்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை.

துளுபாஷை அவ்விடத்தில் (மலையாளத்தைப்போல) பிற்காலத்திலேற்பட்டிருக்கலாம். 'துளுநாடன்ன' என்பதைக் கொண்டுமாத்திரம், அக்காலத்தில் துளுபாஷை வழங்கியிருக்கும் என்று நினைக்க இடமில்லை.

பாழி வம்பவடுகர்விஷயமான செய்யுள் வருமாறு:—

"......................திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த விளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி" (அ-375).

இதுவரை நன்னனைப்பற்றித் தொகைநூல்களிற் கூறியுள்ளவற்றையெல்லாம் தொகுத்தெழுதினோம். மேற்குறித்தவையெல்லாம் ஒரேநன்னனைத்தான் குறிக்கின்றனவென்று நிச்சயமாய்ச்சொல்வதற்கில்லை.

(பதிற்றுப்பத்தைப்பார்க்கிலும் அகநானூறு பிரபல ஆதாரமுடையதென்று தோன்றுகிறது).

பெருங்கௌசிகனாராற் பாடப்பட்ட மலைபடுகடாத்தின் தலைவனாகிய நன்னன்சேய்நன்னன் என்பவனொருவனுண்டு.

சங்ககாவியங்களிலுள்ள சரித்திரங்களையெடுத்தெழுதுவதிற் றேர்ந்த வர்களான ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள், இவ்விருநன்னர்களையும் *ஒருவராகக்கருதி நன்னன்வேண்மான் என்ற தலைப்புடன் செந்தமிழ்த் தொகுதிநான்கு—பகுதி ஐந்தில் ஒருவியாசமெழுதியுள்ளார்கள்.

தொகைநூல்களிற் கூறப்பட்ட நன்னன்வேறு, மலைபடுகடாத்திற் கூறியுள்ள நன்னன் வேறு. ஏனென்றால் தொகைநூலில் நன்னனுக் குரியனவாகக் கூறப்பட்ட கொண்கானம், ஏழிற்குன்றம், பறம்பு, பாரம், பாழி என்னுமிடங்கள் பாட்டிற் காணப்படவில்லை. நன்னனுக்குரியவை யாகப் பாட்டிற் கூறப்பட்ட பல்குன்றக்கோட்டம், செங்கண்மா, காரி யுண்டிக் கடவுளொடுகூடிய நவிரமலை, சேயாறு முதலியவைகள் அகநா னூறு முதலிய தொகைநூல்களிற் காணப்படவில்லை. தொண்டை நாட்டுப் பல்குன்றக்கோட்டத்துக்கும் கொண்கானத்துக்கும் வெகுதூர முண்டு. கொண்கானத்து நன்னனுடைய ராஜ்யம் தொண்டைமண்டலம் வரை பரவியிருக்கவில்லை. அவன் நாடு தமிழ்நாடல்ல வென்றும் தெரிந்தோம்.

மலைபடுகடாத்திற் கூறப்பட்ட நன்னன் பிந்தியவனென்பது எனது அபிப்பிராயம்.

ஆதலால் ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் பல்குன்றக்கோட்டம் என்ற நாடும் ஏழில்மலையும் ஒரேமலைதான் என்றதும், நவிரம் என்னும் பல் குன்றக்கோட்டத்துமலையைத் துளுநாட்டிலுள்ள ஏழிற்குன்றுகளேழி லொன்று என்றதும், நன்னன்ஆய் என்பவனும் நன்னன் என்பவனும் ஒருவனே என்றதும் பொருந்துவனவல்லவாம்.

இனி, பின்னத்தூர்-நாராயணசாமி ஐயரவர்கள் நற்றிணையில் பாடப்பட்டோர்வரலாறு 9௨-ஆம் பக்கமுதலியவற்றில் இந்நன்னன் விஷயமாயெழுதியிருப்பவற்றை ஆராய்வோம்.

1. பிரம்பு என்பது நன்னனுடையவூர் என்றுகூறி அகம் 356-ம் செய்யுளை மேற்கோள்காட்டினர்.

---

* நன்னன், நன்னன்சேய்நன்னன் என இருவராகவேகொண்டு ஐயங்கா ரவர்கள் வேளிர்வரலாறு என்ற புத்தகத்தில் தெளிவாக எழுதியுள்ளமை காண்க. ப-ர்.

அதில் 'நன்னனுஅய்பிரம்பன்ன' என்று பிரம்பு நன்னன் ஆய்க்குரியதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இப்பாட்டிலேயே சிலவரிகளுக்கு மேல் 'நன்னன்பறம்பு' என்று வேறுபட வந்திருப்பதால் நன்னன் என்பவனும் நன்னன் ஆய் என்பவனும் ஒருவரல்லர் இருவராவார் என அறியலாம்.

['நன்னன்வேண்மான் வயலைவேலி வியலூரன்ன' (அ-97) என்பதிற்குறித்த் நன்னன்வேண்மான் நம்முடைய நன்னன்தானென்பது சந்தேகமென்று முன்னமேசொன்னேம். ஆதலால் வியலூர் நன்னனுக்குரியதென்று நிச்சயமாய்க்கொள்வதற் கில்லை.]

2. "இவன் ஆற்றலால் பிண்டன்முதலானோரை வென்று மிகுந்த பொருளீட்டி அப்பொருளைப் பாழியிற் சேமித்து வேளிர்பலரைக் காக்குமாறுவைத்திருந்தனன்" (அ-258) என்றார்.

அகம்-258ல் "நன்னனுதிய னருங்கடிப்பாழித், தொன்முதிர்வேளிரோம்பினர்வைத்த, பொன்னினும்" என்றிருக்கிறது. இதிலிருந்து நன்னனே பொருளீட்டிச் சேமித்துவைத்தானென்பதாகவாவது அவனே வேளிர்பலரைக் காக்குமாறுவைத்தானென்றாவது ஏற்படவில்லை. நன்னனின் முன்னோராகிய (தொன்முதிர்) வேளிர்கள் பலதலைமுறையோர், அங்ககாத்தில் தம்நாட்டிலுண்டானபொன்னை (அ-173 & ந-391)ச் சேகரித்துவைத்துத் தலைமுறைதலைமுறையாய்த் தெய்வத்தினுதவியாற் காத்துவந்தார்கள் என்பதே பொருளாம். இப்பொன், நன்னன் என்பவன், பிண்டன்முதலானோரை வென்று ஈட்டியபொருளல்ல, 'வேளிர்பலர்,' நன்னன்காலத்தவர்களு மல்லர், அவனுடைய வேலைக்காரருமல்லர்.

"அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை
யணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
வருங்கல வெறுக்கையின்" (அ-372)

என்பதையும் காண்க.

3. அப் பிண்டன்முதலானோருடைய உரிமைமகளிரைப் பற்றிவந்து அம்மகளிர்தலையைச் சிரைத்து அக்கூந்தலைக் கயிறாகத்திரித்து

அக்கயிற்றினால் அப்பகையரசரின்யானையைப் பிணித்துவந்தவன் (நற்-270) என்றார்.

நற்-270ல் "ஏந்துவேனன்னன் கூந்தன் முரற்சியிற் கொடிதே" என்பதுதானுள்ளது. பிண்டன்விஷயமானசெய்யுட்கள் எவற்றிலும் மேற்கண்ட விஷயம் கிடையாது.

4. "இவன் கொடுங்கோலனென்றோ வேறெதனாலோ சேரநாட்டை அக்காலத்து அரசாண்டுவந்த களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல் இவனைப் போர்செய்தழிப்பதுகருதித் தன்சேனாபதி ஆய் எயினனைப் பெரும்படையோடு செல்லவிடுத்தனன்" என்றார்.

நன்னன் கொடுங்கோலனென்பதற்காகவுமல்ல, வேறு தெரியாத காரணத்திற்காகவுமன்று, களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல் இவன் நாட்டின்மீது படையெடுத்தது. நன்னன் சேரனதுநாட்டை முன்னே கவர்ந்துகொண்டிருந்தபடியினாற்றான், சேரன் படையெடுத்துத் தன்னாட்டை மீட்டுக்கொண்டான். அது பின்வருஞ்செய்யுளில் 'இழந்தநாடுதந்தன்ன' என்பதாற் றெரிகிறது.

"............................................ குடாஅ
திரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடு தந்தன்ன†
வளம்பெரிது பெறினும் வாரலெ னியானே" (அ-199)

5. 'தன்சேனாபதி ஆஅய் எயினனை' என்றும் 'சேனாபதிமுடிந்தா னென்பதுகேட்ட என்றும் எழுதியிருக்கிறார்கள்.

ஆய் எயினன் சேரனின்சேனாபதியென்று செய்யுட்களிலிருந்து கிடைக்கவில்லை.

6. "அந்நாளில் மதுரையிலிருக்கும் அகுதையென்பான் தான் மிக்கவீரமுடையவனாயிருந்தும் இவ்வாயெயினனுக்கு நடுங்கி யொடுங்கி

†'தந்தனன்'என்று பாடங்கொண்டார் பின்னத்தூர்நாராயணசாமியையர்.

யிருந்தான் ........இப்பெரும்பூசல்கேட்டு மதுரையில் அடங்கிக்கிடந்த அகுதை அச்சம்நீங்கி மகிழ்வானுயினன் (அ-208)" என்றார்;

அகம்2-08ல் கூறியிருப்பது:—

'உருவினை நன்ன னருளான் கரப்ப
பெருவிதுப் புற்ற பல்வேண் மகளிர்
குருஉப்பூம் பைந்தா ரருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு'

இதிலிருந்து (பட்சிகள் வெயிலைமறைத்துச் சத்தமிட்டதற்காகச் சினந்து) நன்னன் எயினனுடலைக் கொடுக்காம லொளித்துவைக்க, அவன்மனைவியர் பூசலிட, அப்பூசலை அகுதையென்பவன் களைந்தா னென்பதுமாத்திரம் தெரிகிறது. புறம் 347ல் 'மறப்போரகுதை, குண்டுநீர் வரைப்பிற் கூடலன்ன குவையிருங்கூந்தல்' என்றுமாத்திரம் காணப்படுகிறது. இக் கூடல்அகுதைதான் அகநானூற்றிற் குறிக்கப் பட்டிருக்கிறனென்று நிச்சயமாகச்சொல்வதற் கில்லை. ஐயரவர்கள்கூறிய மற்றவிவரங்கள் ஷை செய்யுளிலிருந்து கிடைக்கவில்லை. அகுதை ஆயெயினனுக்கு நடுங்கி யொடுங்கியிருந்தானென்பதற்கும் இப்பூசல் கேட்டு (மதுரையில்) அடங்கிக்கிடந்த அகுதை அச்சம்நீங்கி† மகிழ்வா னுயினன் என்றதற்கும் ஆதாரம் எங்கும் கிடைக்கவில்லை. இதிற் கூறிய பூசல் இன்னது என்பதை ஐயரவர்கள் சரியாயறிந்துகொண்ட தாகவும் தெரியவில்லை.

7. "மிஞிலி மிக்கவீரமுடையவனென்று பிறர்தடுத்துக்கூறியதை யுங் கேளாமல் (அ-396)" என்றார்.

'பிறர் தடுத்துக்கூறியதையுங் கேளாமல்' என்பது ஐயரவர்கள் எடுத்துக்காட்டியசெய்யுளிலிருந்து கிடைக்கவில்லை. அச்செய்யுளில் உள்ளது,—

'யாழிசை மருங்கிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்ற வாஅ யெயினன்

†பழையன்மாறனது மதுரையில் கிள்ளிவளவன் ஜயிக்க? கோதைமார்பன் மகிழ்ந்தானென்றிருக்கிறது (அ-346);

இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தன்ன'

என்பதே. மற்றவிடங்களிலிருந்தும் இவ்விஷயம் கிடைக்கவில்லை.

(ஆனால் இவ்விஷயம் அன்னியவிஷயமாய்க் கூறப்பட்டுள்ளது. "எவ்வி, நயம்புரிநன்மொழி யடக்கவுமடங்கான், பொன்னிணர்நறு மலர்ப் புன்னைவெஃகித், திதியனொடுபொருத வன்னிபோல, விளிகுவை கொல்லோ, அ-126.)

8. 'அப்பொழுது அந்நன்னன் தனது பேய்க்கூட்டருகில் நின்று கூறிய கட்டளையை மேற்கொண்டு' (அகம்-142) என்கிறார்.

ஷை செய்யுளில் நன்னன் பேய்க்கூட்டருகில் நின்று கட்டளையிட்டதாகவும் எயினன் மேற்கொண்டதாகவு மில்லை. அச்செய்யுட் பாகம் வருமாறு:—

'கறையடி யானை நன்னன் பாழி
யூட்டரு மாபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி ஞிமிலி' (அ - 142.)

இதற்கு நாம் முன்னுரைத்தபொருளோடு 'பேய்க்கூட்டருகில் எதிர் கொண்டு சந்தித்தான்' என்னும் பொருளும் கொள்ளலாம்.

9 & 10. "பிறகு அவ்வெயினனது உரிமைமகளிர் திரண்டெழுந்து காவிரியாற்றுக்குவந்து தங்கள் வழக்கப்படி சாமக்கிரியை முடித்து அலங்கரித்த எயினன்போன்ற வடிவமொன்றனை அந்நீரிற் போகட்டு நீராடிப் பெயர்ந்துபோயினர் (அ-181)" என்றார்.

ஐயாவர்கள் மேற்கோளாகக்காட்டிய அகம் 181-ஆம் செய்யுள் முழுவதும் வருமாறு:—

'துன்னருங் கானமுந் துணித லாற்றாய்!
பின்னின்று பெயரச் சூழ்ந்தனை யாயி
னென்னிலை யுரைமோ நெஞ்சே, யொன்னா
ரோம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
யடுபோர் மிஞிலி செருவிற் சுடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளஞ் சிவப்ப

வண்மை யெயினன் வீழ்ந்தென ஞாயிற்
றெண்கதி ருருப்பம் புதையவோ ராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்
பூவிரி யகன்றுறைக் கணைவிசைக் கடுநீர்க்
காவிரிப் பேரியாற் றயிர்கொண் டீண்டி
யெக்க ரிட்ட குப்பை வெண்மணல்
வைப்பின் யாணர் வளங்கெழு வேந்தர்
ஞால நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முது நூல் முக்கட் செல்வ
னால முற்றங் கவின்பெறத் தைஇப்
பொய்கை சூழ்ந்த பொழின்மணை மகளிர்
கைசெய் பாவை துறைக்க ணிறுக்கு
மகர நெற்றி வான்றோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லிற்
புகாஅர் நன்னாட் டதுவே பகாஅர்
பண்ட நாறும் வண்டட ரைம்பாற்
பணைத்தகைத் தடைஇய காண்பின் மென்றோ
ளணங்குசா லரிவை யிருந்த
மணங்கமழ் மறுகின் மணற்பெருங் குன்றே'

(இடைச்சுரத்து ஒழியக்கருதியநெஞ்சிற்குச் சொல்லியது; பாலை-பரணர்.)

இதிற் 'பொய்கைசூழ்ந்த பொழின்மணை மகளிர்' என்று சொல்லப் பட்டோர் புகார்நகரத்துறையில் விளையாடுவோர்; குரூஉப்பூம்பைந்தா ருருக்கியபூசலினராய, பெருவிதுப்புற்ற பல்வேண்மகளிரல்ல ரென்று தோன்றுகிறது.

'அவர்கள் காவிரியாற்றுக்குவந்து' என்கிறார். காவிரியாற்றுக்கும் அவர்களிருந்த கொண்கானப் பாழிப்பாசறைக்கும் வெகுதூரமாதலால் அவர்கள் காவிரிக்குவந்ததாகக் கொள்ளமுடியாது. புகார்நகரத்தை வருணிக்கப்புக்க பரணர், முதலிற் காவிரியை வருணிக்கிறார். 'விசும்பிடை தூர வாடி மொசிந்துடன்' என்பதுடன் பிறிதிலிகதை நின்றுவிடுகிறது. 'பூவிரியகன்றுறை' என்பதுமுதல் 'புகார்நன்னாட்

டதுவே' என்பதுவரை புகார்வர்ணனை; ஆதலால் அதற்கு மிதற்கும் சம்பந்தமில்லையென்று தோன்றுகிறது. 'தங்கள் வழக்கப்படி சரமக் கிரியைமுடித்து' என்றார். காவிரியிற்சரமக்கிரியைமுடித்ததாகச்செய்யுளி லிருந்து தெளிவா யறியமுடியவில்லை. "அலங்கரித்தஎயினன்போன்ற படிவமொன்றனை அங்கீரிற் போகட்டு நீராடிப் பெயர்ந்துபோயினர்" என்றார். "காவிரிப் பேரியாற் றயிர்கொண் டீண்டி, யெக்க ரிட்ட குப்பை வெண்மணல், வைப்பின் யாணர் வளங்கெழு" என்பதனால் சிறுவெண் மணலெக்கர்களை வருணித்ததாகுமேயொழியக் காவிரி நுண் மணல் கொண்டு எயினனுருவத்தை யுண்டாக்கினார்களென்று கொள்வதற்கில்லை. 'உருவத்தை நீரிற்போகட்டு நீராடிப் பெயர்ந்துபோயினர்' என்பதற்கும், இச்செய்யுளிலிருந்தும் மற்றச் செய்யுட்களிலிருந்தும் ஆதாரம் கிடைக்க வில்லை. 'பொய்கை சூழ்ந்த பொழின்மண மகளிர் கைசெய் பாவை துறைக்க ணிறுக்கும்' என்பது புகார்த்துறையில் விளையாடுமகளிர் காவிரியாற்றயிர்கொண்டுசெய்த வண்டற்பாவையாயிருக்கலாம். இறுக் கும்புகார் என்று நிகழ்காலத்தாற் கூறியிருக்கிறது. (எயினனுடலை நன்னன் கொடுக்கமறுத்தானென்ற காரணமும் இச்செய்யுளிற் கூறவில்லை). ஆதலால் ஐயரவர்கள்கருத்து இச்செய்யுளிலிருந்து தெளிவாய்க் கிடைக்க வில்லை. இஃது எங்ஙனமாயினும், ஐயரவர்கள் கதையை ஜனரஞ்சகமா யிணைத்துப் பூர்த்திசெய்யும்விருப்புடையாரென்று தெரிகிறது.

வித்வான் A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

கவர்ன்மெண்டுகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதன்,

கும்பகோணம்,

# ஸ்வப்ன வாசவ தத்தம்.

[௩௭௬-ம் பக்கத்தொடர்ச்சி.]

## இரண்டாம் அங்கம்.

(சேடி வருதல்)

சேடி:—குஞ்சரீ! குஞ்சரீ! இளவரசி எங்கே? என்னசொல்லுகிறாய்? மாதவிப்பந்தலருகிற் பந்துவிளையாடுகிறாள் என்றா? அப்படியானால் அவளிடம் போகிறேன்; (சுற்றிப்பார்த்து) இதோ இளவரசி குழையை மேலேதூக்கிமாட்டிக்கொண்டு, சிரமத்தால் வியர்வைத்துளியரும்பிநிற்கக் களைப்புற்ற அழகிய முகத்துடன் பந்துவிளையாடிக்கொண்டுவருகிறாள். அருகிற்செல்கிறேன்.

(போகிறாள்)

(பரிவாரத்துடன் பந்துவிளையாடிக்கொண்டு பத்மாவதியும் ஆவந்திகைவேஷம்பூண்டவாஸவதத்தையும் வருதல்)

ஆவந்தி:—ஸகீ! உனதுபந்து இந்தா!

பத்மாவதி:—அம்மா! இவ்வளவு விளையாடினதுபோதும்.

ஆவந்தி:—ஸகீ! வெகுநேரம் விளையாடியதால் உன்கைகள் மிகச் சிவந்து வசமழிந்தவைபோல் தளர்ந்திருக்கின்றன.

சேடி:—விளையாடட்டும். இளவரசி இன்புறுதற்குரிய தனது கன்னிப் பருவத்தை நன்குவிளையாடிக் கழிக்கட்டும்.

பத்மா:—அம்மா! என்னை ஏன் பரிகசிப்பவள்போற் பார்க்கிறாய்?

ஆவந்தி:—இல்லை; இல்லை; இப்பொழுது மிக அழகாக இருக்கிறாய். உனக்கு வரன் சீக்கிரம்வருவாரென்று நினைக்கிறேன்.

பத்மா:—என்னைப் பரிகாசம்செய்தது போதும்.

ஆவந்தி:—மஹாஸேனன்மருமகளே! சும்மா விருக்கின்றேன்.

பத்மா:—மஹாஸேனன் என்பது யாரை?

ஆவந்தி:—பிரத்தியொதனன் என்றபெயருடன் உச்சயினி அரசர்ஒருவர் இருக்கிறார்; சேனைச்சிறப்புப்பற்றி அவரை மஹாஸேனன் என்று சொல்வர்.

சேடி:—அவ்வாசன்மகனை மணக்க இளவரசி விரும்பவில்லை.

ஆவந்தி:—ஆனால் யாரை விரும்புகிறாள்?

சேடி:—உதயனன் என்று வத்ஸநாட்டரசர் ஒருவர் இருக்கிறார்; அவரது குணங்களில் இளவரசி ஈடுபட்டிருக்கிறாள்.

ஆவந்தி:—(தனக்குள்) என்காதலரையா கணவனாயடைய விரும்புகிறாள்! (வெளிப்பட) என்னகாரணத்தால்?

சேடி:—அனுகம்பையுடையவர் என்று.

ஆவந்தி:—(தனக்குள்) தெரியும் தெரியும்; நானும் இவ்வாறு ஈடுபட்டதுண்டு.

சேடி:—அவ்வரசர் அழகற்றவரானாலோ!

ஆவந்தி:—இல்லை இல்லை; அவர் அழகுள்ளவர்தான்.

பத்மா:—அம்மா! உமக்கெப்படித்தெரியும்?

ஆவந்தி:—(தனக்குள்) காதலர்மீதுள்ள அன்பினால் என்நிலைமையிற் கடந்துவிட்டேன். என்னசெய்வேன்? இருக்கட்டும் தெரிந்தது. (வெளிப்பட) ஸகி! உச்சயினியில் ஜனங்கள் இவ்விதம் சொல்வதுண்டு.

பத்மா:—சரிதான்; உச்சயினியில் அவரை எளிதிற் காணக்கூடும். அன்றியும், வடிவழகென்பது எல்லோர்மனத்தையும் கவரத்தக்கது.

(செவிலித்தாய்வருதல்)

செவிலி:—இளவரசிக்கு மங்கலமுண்டாக. அம்மா! விவாகத்திற் கொடுக்கப்பட்டாய்.

ஆவந்தி:—யாருக்கு அம்மா?

செவிலி:—வத்ஸநாட்டரசன் உதயனனுக்கு.

ஆவந்தி:—அவ்வரசர் சௌக்கியமாயிருக்கிறாரா?

செவிலி:—சௌக்கியமாய் இங்கு வந்திருக்கிறார். இளவரசியை மணக்க இசைந்தும் இருக்கிறார்.

ஆவந்தி:—என்ன அநியாயம்?

செவிலி:— அக்காரியத்தில் அநியாயம் என்ன?

ஆவந்தி:—ஒன்றுமில்லை; வாஸவதத்தையின்பொருட்டு அத்தனை துக்கப் பட்டவர் உடனே உதாஸீனராகிவிட்டனரே என்பதுதான்.

சேவிலி:—கழிந்ததை எண்ணுமல் வருவதைக் கருதுவதும் எளிதில் மனந்தேறுவதும் பெரியோரியல்பு.

ஆவந்தி:—அவரே தாமாகவே வந்து வேண்டிக்கொண்டனரா?

சேவிலி:—இல்லை; அவர் வேறுகாரியமாக இங்குவந்தார். அவரது குலமும் அறிவும் பருவமும் உருவமும் கண்டு மஹாராஜா தாமாகவேகொடுத்தார்.

ஆவந்தி:—(தனக்குள்) அப்படியானல் என்காதலர் குற்றமற்றவர்தான்.

(வேறொருசேடி வருதல்)

சேடி:—(செவிலியைநோக்கி) அம்மா! விரைவில் விரைவில், இன்று நல்லநட்சத்திரமாம். இன்றே மங்கலியதாரணம் செய்ய வேண்டுமென்று மஹாராணி சொல்லுகிறுர்.

ஆவந்தி:—(தனக்குள்) விரையுந்தோறும் என்மனம் இருளடைகிறது.

சேவிலி:—இளவரசி! வரவேண்டும் வரவேண்டும்.

(எல்லோரும் போகிறுர்கள்)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

## மூன்றும் அங்கம்.

(ஆவந்திகை கவலையுடன் வருதல்.)

ஆவந்தி:—கலியாணஆரவாரம் நிரம்பிய அந்தப்புரத்திலிருந்து பத்மா வதியைப் பிரிந்து என்விதியால் நேர்ந்த துயரத்தை ஆற்றப் பிரமதவனத்திற்கு வந்தேன். (உலாவிக்கொண்டு) இதென்ன பெருந்துன்பம்வந்து விடிந்தது. என்காதலரும் வேறொருத்திக்குச் சொந்தமாய்விட்டாரே! சற்று உட்காருகிறேன். (உட்கார்ந்து) அன்றிற்பேடை பெரும்பாக்கியமுடையது; அது தன்சேவலைப் பிரிந்து உயிர்வாழ்வதில்லை. பாக்கியம் கெட்ட நானே காதலரைக் காண்பேன் என்னும் ஆசையால் உயிர்வாழ்கிறேன்.

(பூப்பறித்துக்கொண்டு ஒரு சேடி வருதல்.)

சேடி:—அவ் ஆவந்திகை எங்கே சென்றுள்? (நாற்புறமும் பார்த்து) இதோ அவள் மனக்கவலையால் முகமலர்ச்சிகுன்றிப் பனியால் மறைந்த பிறைமதிபோல் இயற்கையழகுகெடாமல், பிரியங்கு மரத்தடியிலுள்ள கல்மேடையில் உட்கார்ந்திருக்கிறுள்; (அருகிற்சென்று) அம்மா! எவ்வளவு நேரமாக உம்மைத் தேடுகிறேன்!

ஆவந்தி:—எதற்காக?

சேடி:—எங்கள் மஹாராணி, குடிப்பிறப்பு அன்பு ஆற்றல் இவற்றிற் சிறந்தவராகத் தம்மை மதிக்கிறுர். ஆதலால் இந்த மண மாலையைத் தொடுத்தருளுங்கள்!

ஆவந்தி:—யாருக்கு இந்த மாலை?

சேடி:—நமது இளவரசிக்கு.

ஆவந்தி:—(தனக்குள்) இதுவும் நான் செய்யவேண்டியதாயிற்று! அந்தோ! தெய்வம் கருணையற்றதா?

சேடி:—அம்மா! இந்தச் சமயத்தில் வேறொன்றையும் நினைத்துக் கொண்டிருக்காதேயுங்கள்! மாப்பிள்ளை அந்தப்புரவாவியில் ஸ்நாநஞ்செய்கிறுர். விரைவாக மாலைகட்டவேண்டும்.

ஆவந்தி:—(தனக்குள்) ஆமாம்; இப்பொழுது வேறொன்றையும் சிந்திக்க முடியாது. (வெளிப்பட) மாப்பிள்ளையைப் பார்த்தனையா?

சேடி:—ஆமாம். எனது குதூஹலமும், இளவரசியின்மீதுள்ள அன்பும் தூண்டப் பார்த்தேன்.

ஆவந்தி:—மாப்பிள்ளை எப்படிப்பட்டவர்?

சேடி:—அம்மா! கேளுங்கள். இத்தகைய ஒருவரை நான் இதுகாறும் கண்டதில்லை.

ஆவந்தி:—ஸகி! சொல்லு சொல்லு! மிக்க அழகுடையவரோ?

சேடி:—மன்மதன் என்றே சொல்வேன்; அம்பும் வில்லுந்தான் குறை.

ஆவந்தி:—சரி, போதும் இவ்வளவு.

சேடி:—ஏன் போதுமென்று தடுக்கிறீர்?

ஆவந்தி:—அன்னிய புருஷரைப் புகழ்ந்துபேசுவது தக்கதன்று.

சேடி:—விரைவாக மாலே தொடுங்கள்!

ஆவந்தி:—(புஷ்பங்களை யெடுத்துப்பார்த்து) இதோ ஓர் மூலிகையிருக்கிறதே இதன்பெயர் என்ன?

சேடி:—"ஸௌமங்கலீகரணம்" என்பது.

ஆவந்தி:—அப்படியா? (தனக்குள்) என்பொருட்டும் பத்மாவதியின் பொருட்டுமாக இதை நிரம்பத்தொடுக்கவேண்டும். வேறொரு மூலிகையைப்பார்த்து, உரக்க இம்மூலிகையின் பெயர் என்ன?

சேடி:—* "ஸபத்நீமர்த்தனம்" என்பது.

ஆவந்தி:—இது தொடுக்கத்தக்கதன்று.

சேடி:—ஏன்?

ஆவந்தி:—அவர் முதல் மனைவி இறந்துவிட்டாள், ஆதலால் அது பயனற்றது.

(வேறொரு சேடி வருதல்.)

சேடி:—அம்மா! விரைவில் விரைவில். இதோ கற்பாசியர்கள் மாப்பிள்ளையை அந்தப்புர 'நாலுகட்டு'க்கு அழைத்துச்செல்கிறார்கள்.

ஆவந்தி:—தொடுத்தாய்விட்டது, மாலேயைப்பெற்றுக்கொள்.

சேடி:—மாலே வெகு மனோகரமாயிருக்கிறது; நான் போய்வருகிறேன்.

(இரண்டு சேடிகளும் போதல்.)

ஆவந்தி:—இவள் போய்விட்டாள். ஆ! என்ன கஷ்டம்! என் இன்னுயிர்த்தோழரும் வேறொருத்திக் குரியராய்விட்டார். நித்திரைவருமாயின், நான் துயின்று என் துயரத்தை யொழிப்பேன். (போதல்)

மூன்றும் அங்கம் முற்றிற்று.

(தொடரும்.)

ஜி. ஹரிஹரசாஸ்த்ரி.

திருவநந்தபுரம்.

---

*சக்களத்திக்குத் துயர்தருவது.

# மதிப்புரை.

மூவருலா.—கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் இயற்றிய விக்ரமசோழனுலா, குலோத்துங்கசோழனுலா, இராசராசசோழனுலா என்னும் பிரபந்தங்களின் தொகுதியே மூவருலா என வழங்கப்பெறு கின்றது. அது, சொற்சுவை பொருட்சுவை நிறைந்ததாய்ச் சோழர் குடிக்குரிய பழம்பெருமைகளையும் அவ்வாசமாபிற்பல ரருஞ்செயல்களை யும் வெளியிடுவதாகலின் இலக்கியம்பயில்வார்க்கும் சரிதவாராய்ச்சி யாளர்க்கும் ஒருங்கு பயன்தரவல்லதாயுள்ளது. ஆகையால், அதனை அச்சியற்றி வெளயிடக்கருதி, இப்பொழுது சென்னை அடையாற்றுக் கல்லூரித்தமிழாசிரியர் ஸ்ரீமத் பண்டித—அ. கோபாலையரவர்கள் பழைய ஓலைச்சுவடிகளையும் கையெழுத்துப்பிரதிகளையும் ஒப்புநோக்கிப் பதிப்பித்திருக்கும் நன்முயற்சி பாராட்டற்குரியதாகும். இப்பதிப்பு, நூலாசிரியரைப்பற்றிய குறிப்புக்களும் உலாத்தலைவர்களைப்பற்றிய குறிப்புக்களும், சோழவமிசாவளியும் ஆகிய இவற்றுடன்கூடித் தடித்த காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 12. வேண்டுவோர் மயிலாப்பூர்ச் செந்தமிழ்மந்திரம்புத்தகசாலையிற் பெறுக.

பெஞ்சமின் பிராங்கலின்.—இஃது, இப்பெயர்புனைந்த ஒரு மேல் நாட்டுப் பெருந்தகையின்சரித்திரத்தை எளிய தமிழ்நடையில் எழுதப் பெற்ற சிறுபுத்தகமாகும். இதில், சரிதத்தலைவரின் அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி நடுநிலை யாதிய நற்குண நற்செய்கைகள், பள்ளியிற் பயிலும் மாணவர்களும் அறிந்து பயனுறுமாறு மிகத் தெளிவாகவும் இனிமையாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன. இதனை யெழுதியவர், விருதுநகர் க்ஷத்திரிய வித்தியாசாலையின் சரித்திரவாசிரியர் ஸ்ரீமத். பி. சுந்தரராஜஐயங்கார் (B.A.) அவர்களாவர். இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஆசிரியர்க் கெழுதிப் பெறுக.

க்ஷத்ரசூடாமணி.— சீவகனது சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறும்நூல்களில் ஒன்றாகிய இது, முடிகொண்டான் ஸ்ரீமத் M. M. நாராயணசாமிஐயரவர்களால் தமிழில் வசனரூபமாக எழுதப் பெற்றுள்ளது. இதில் அரசர் அமைச்சர்களின் கடமையும், குலமகளிரது ஒழுக்கமும், இல்லறவியல்பும், அறத்தின்பெருமையும், ஊழ்வலியுறுத்த லும், ஊக்கமுடைமையும், நன்றிமறவாமைமுதலிய பல அரியநீதிகளும் ஆங்காங்குப் பயின்றுவருகின்றன. தமிழ்நூல்கற்கப்புகும்மாணவர்க ளுக்கு இது பெரிதும் பயன்படத்தக்கது. விலை அணா 6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.